
தமிழரசு

16-2-1986 75 காசு





சென்னைக்கு வருகை புரிந்த போப்பாண்டவர் அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கிய வெள்ளியாலான நினைவுப் பரிசு (5.2.1986).



தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017 மலர் : 16 இதழ் : 16
குரோதன - மாசி 4 16-2-1986



# சென்னைத் திருநகரில் போப்பாண்டவர்

உலகு முழுவதும் உள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவப் பெருமக்களின் தலைவராகவும் இத்தாலியிலே இருக்கின்ற வத்திகன் என்ற தனிநாட்டின் தலைவராகவும் இருக்கின்ற போப்பாண்டவர் 2-வது ஜான் பால் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார்.

1.2.86 முதல் 10.2.86 வரை பத்து நாட்கள் சுற்றுப்பயணத் திட்டத்தோடு டில்லியில் தனி விமானம் மூலம் வந்திறங்கிய போப்பாண்டவர், இந்திய மண்ணை மண்டியிட்டு வணங்கி முத்தமிட்டார். இந்நாட்டுப் பெருமக்களின் நலன் வேண்டிப் பிரார்த்தித்தார். அதன்பின் இந்தியக் குடியரசுத் தலைவரும், இந்தியப் பிரதமரும் அவரை அன்புடன் வரவேற்றார்கள்.

**டில்லியில்**

டில்லி விமான நிலையத்தில் அளிக்கப்பட்ட இராணுவ வரவேற்பை ஏற்றுக்கொண்ட போப்பாண்டவர், ''நான் சமாதானத்தின் ஊழியனாகவே இங்கு வந்திருக்கிறேன். அனைத்து மத மக்களுக்கும் இடையே 'ஒற்றுமையான சூழ்நிலையை உருவாக்குவதுதான் இந்தப் பயணத்தின் நோக்கம்'' என்று தனக்கு அளிக்கப்பட்ட வர்வேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது அவர் குறிப்பிட்டார்.

போலந்து நாட்டவரான இவரது இயற்பெயர் கரோல் வோஜ்டிலா என்பதாகும். 1978ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாளன்று 264வது போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, தன் பெயரை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற மரபுப்படி இரண்டாம் ஜான் பால் என்று தன்னுடைய பெயரை இவர் மாற்றிக் கொண்டார்.

கம்யூனிஸ்ட் நாடான போலந்து நாட்டிலிருந்து முதன் முதல் போப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர், இந்த நூற்றாண்டின் 8வது போப் ஆவார். கடந்த நான்கு நூற்றாண்டுகளில் 58 வயதில் போப்பாண்டவராக முதலில் நியமிக்கப்பட்டவர் இவரே.

1920ஆம் ஆண்டு மே 18ஆம் தேதி, இராணுவ அதிகாரி கரோல் - ஆசிரியை எமிலியா தம்பதியருக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்தார். மிக மிக எளிய குடும்பம் இவருடையதாகும்.

பிரஞ்சு, இத்தாலி, ஜெர்மன், ஸ்பானிஷ், கிரேக்கம், இலத்தின் போன்ற மொழிகளில் நல்ல தேர்ச்சி மிக்கவரான போப்பாண்டவர் தமது இந்தியப் பயணத்திற்காகத் தமிழ், கொங்கனி, வங்காளி, மராத்தி, அசாம், இந்தி கன்னடம், பீகாரி ஆகிய மொழிகளையும் கற்றுக் கொண்டார்.

இவர் சிறந்த கவிஞரும் நடிகரும் பத்திரிகையாளரும் விளையாட்டு வீரரும் ஆவார்.

**தமிழ்நாட்டில் வரவேற்பு**

போப்பாண்டவர் வருகையையொட்டி தமிழ்நாடு அரசு ஒரு நாள் விடுமுறை அறிவித்திருந்தது. வரவேற்பு ஏற்பாடுகளும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் சிறப்பாகக் கவனிக்கப்பட்டன.

5.2.86 அன்று காலை 11.25 மணிக்கு சென்னை மாநகரில் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வந்திறங்கிய போப்பாண்டவரை மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்., ஆர்ச் பிஷப் அருளப்பா ஆகியோர் விமானத்தின் அருகே சென்று சந்தன மாலை அணிவித்து இன்முகத்தோடு வரவேற்றார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் போப்பின் கரத்தில் அன்பு முத்தமிட்டார்.

சர்ச் பார்க் பள்ளியைச் சேர்ந்த மாணவியர் வரவேற்பையும் அவர் அன்போடு ஏற்றுக்கொண்டார்.

விமானநிலைய வரவேற்பு அறையில் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு புதுவை மாநில

சென்னை மாநகரில், போப் ஆண்டவர் பயணம் செய்த குண்டு துளைக்காத காரைத் திறம்படச் செலுத்தியவர் சென்னை குற்றப் பிரிவு காவல்துறை ஏட்டு திருவேங்கடசாமி என்பவராவார்.

சென்னையை விட்டுப் புறப்படு முன் போப்பாண்டவர் அவருக்குத் தங்கப் பதக்கமொன்றும், ஆயிரம் ரூபாய் ரொக்கமும் அன்பளிப்பாகத் தந்து பாராட்டினார். இது தவிர, அந்த டிரைவருக்குக் காவல் துறை ஆணையர் திரு தேவாரம் ரூ. 250ம், போக்குவரத்துத் துணை ஆணையர் திரு பாலச்சந்தர் ரூ.100ம் அன்பளிப்பாக வழங்கினார்கள்.



அமைச்சர் பெருமக்களும், முன்னாள் முதல்வர் திரு எம்.பக்தவத்சலம், மாண்புமிகு மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ.சி., மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன், சென்னை நகர ஷெரீப் திரு ஏவி.எம்.சரவணன் ஆகியோரும் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களும் போப்பாண்டவரை வரவேற்றார்கள்.

இதன் பின், ரூ.3 இலட்சம் செலவில் குண்டு துளைக்காதவாறு 'ஸ்டாண்டர்டு' நிறுவனத்தால் சிறப்புறத் தயாரிக்கப்பட்டிருந்ததோர் 'வேன்' மூலம் புறப்பட்டார் அவர். அதில் இந்திய தேசீயக் கொடியும், வத்திகன் கொடியும் கட்டப்பட்டிருந்தது. 12.20 மணிக்கு செயின்ட் தாமஸ் மலைக்கு வந்து சேர்ந்தார். அங்குள்ள புனித அப்போஸ்தலர் கான்வென்ட்டுக்குச் சென்ற அவர் அங்கிருந்த ஆதரவற்ற குழந்தைக்ளை ஆசீர்வதித்தார். புனித தோமையர் ஆலயத்திலுள்ள ஓவியர் லூகா வரைந்த மாதா படத்தின் முன் முண்டியிட்டுப் பிரார்த்தித்தார். சிலுவை மீது முத்தமிட்டார். மலையின் மேலும் கீழுமாய் சூழ்ந்து நின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்த மக்களைக் கரம் உயர்த்தி ஆசீர்வதித்தார்.

## அனைத்து மத வரவேற்பு

சென்னை நகரெங்கும் வரவேற்பு வளைவுகளும் வண்ணப் பதாதைகளும் கட்டப்பட்டிருந்தன. வாழ்த்துச் சுவரொட்டிகள் பல ஒட்டப்பட்டிருந்தன.

அங்கிருந்து கிளம்பிய அவர், வழி நெடுகிலும் சூழ்ந்து நின்று வாழ்த்தொலி எழுப்பிய—வத்திகன் கொடியசைத்து வரவேற்புத் தெரிவித்த எல்லா மக்களுக்கும் ஆசி அருளியவாறே 12.45 மணிக்கு, அரசினர் தோட்டத்திலுள்ள ராஜாஜி மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

திருவாரூர் லட்சப்பா குழுவினர் நாதசுர இசை வழங்கினர். நீண்ட படிக்கட்டுகளில் சீருடையோடு அழகுற நின்ற 8 பள்ளிகளைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் மலர் தூவி வரவேற்றனர். பின்னர் பூரண கும்ப வரவேற்பு அளிக்கப்பட்டது. உள்ளே பலமொழிகளில் பிரார்த்தனைக் கீதங்கள் பல மதங்களின் சார்பில் இசைக்கப்பட்டன.

மேடைக்கு வந்து சேர்ந்த போப்பாண்டவர் ஒரு மணியளவில் அங்கிருந்த 5அடி உயரக் குத்துவிளக்கை ஏற்றி வைத்தார். மேலேயிருந்த பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, காந்தியடிகள், பண்டிதநேரு ஆகியோரின் திருவுருவப் படங்களை மலர்ந்த முகத்தோடு ஒரு முறை பார்த்துவிட்டு அமர்ந்தார், அவருக்கு மாலையணிவித்த

*உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப்பாண்டவர், உலக பிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களின் தலைவரான திரு ராபர்ட் ரன்சியை பம்பாயில் (9.2.86) சந்தித்துப் பேசி மகிழ்ந்தார்.*

சேலம் பிஷப் மைக்கேல் துரைசாமி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பிறகு-போப்பாண்டவருக்குத் தருமபுரம் ஆதீனத்தார், இந்து மதச் சார்பில் பொன்னாடை போர்த்தித் திருநீறு அணிவித்தார். தர்மசக்கரம், வீணை ஆகியவைகள் வழங்கப்பட்டன. முஸ்லீம் பெருமக்கள் சார்பில் திரு அ.க.அ.அப்துல் சமது, எம்.எல்.ஏ., பொன்னாடை போர்த்தினார். சனாதன தர்மத்தார், ஜைனமதத்தார், புத்தமதத்தார் சார்பிலும் அவருக்கு அன்பளிப்புகள் அளிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து முதலில் தமிழில் ''உங்களையெல்லாம் காணவேண்டும் என்று நான் துடித்துக் கொண்டிருந்தேன் — காண்கிறேன்'' எனத்தொடங்கி, தமது உரையை ஆங்கிலத்தில் நிகழ்த்தினார். போப்பாண்டவர் ''நமக்கும் மேலே ஒருவன் - அவனே நமக்கெல்லாம் இறைவன்'' என்று தமிழிலேயே கூறி உரையை முடித்தார்.

1.30 மணியளவில் ராஜாஜி மண்டபத்திலிருந்து புறப்பட்டு, சாந்தோமில் உள்ள 'பிஷப் அவுசிற்குச்' சென்று உணவுண்டு, சிறிது ஓய்வெடுத்துக் கொண்டார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு 3.30 மணியளவில் 'சாந்தோம் சர்ச்'சுக்குச் சென்று பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

## கடற்கரைக் கூட்டம்

பிறகு, தமிழக வருகையின் கடைசி நிகழ்ச்சியாகச் சென்னை மெரீனா கடற்கரையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'திருப்பலி ஆராதனைக்' கூட்டத்திற்கு 3.45 மணிக்கு அவர் வந்துசேர்ந்தார். இந்நிகழ்ச்சியில் லட்சோப லட்சம் மக்கள் கலந்துகொண்டார்கள். சரியாக 3 மணிநேரம்-கிறிஸ்தவ தேவாலயம் போல அமைக்கப்பட்டிருந்த பிரமாண்டமான அலங்கார மேடையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழ்நாட்டில் கிறிஸ்தவப் பணியாற்றிய அருளானந்தர் என்று அழைக்கப்படும் ஜான்பிரிட்டோ நினைவாகச் சிறப்பு ஆராதனை செய்யப்பட்டது. ஆர்ச்பிஷப் அருளப்பா வரவேற்புரையாற்றினார்.

அப்போது அவர், போப்பாண்டவர் வரவேற்பு சிறப்புற அமைய உதவிய அரசுக்கும், மாண்புமிகு முதல்வருக்கும், அமைச்சரவைக்கும் அதிகாரிகளுக்கும் மிகவும் நன்றி தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியின்போது போப்பாண்டவருக்குத் தமிழக மக்களின் சார்பாக வீணை, இந்துக் கோயில், கிறிஸ்தவ தேவாலயம் முஸ்லீம் மசூதி மூன்றும் கொண்ட சந்தனமர அமைப்பு.



மயில் பொம்மை, முத்துக்கள் பதித்த சிலுவை, நண்டு, கரும்பு, மலர், தேங்காய், பழங்கள் ஆகியவை பரிசளிக்கப்பட்டன.

''இந்தியாவின் அன்பார்ந்த மக்களே! உங்கள் இந்தியத் திருநாட்டுக்குத் திருப்பயணியாக நான் வந்துள்ளபோது, பக்தியும் கலையும் கலாசாரப் பண்பாடும் நிறைந்த தமிழ்நாட்டின் தலைநகருக்கு என்னைக் கொண்டு வந்துள்ள இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். நான் இன்று உங்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்து தமது உயிரையே தியாகம் செய்த அருளானந்தர் நினைவாக உங்களோடு சேர்ந்து திருப்பலி நிறைவேற்றுகிறேன்'' என்று தமிழில் தொடங்கி, பிறகு சுமார் 15 நிமிடநேரம் ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

தமது இந்தியப் பயணம் முடிந்து, 10-2-86 அன்று இரவு 7-30 மணிக்கு பம்பாயிலிருந்து வத்திகன் நகருக்கு விமானம் மூலம் பயணமான போப் ஆண்டவர் அதற்கு முன்னதாக—


இந்தியச் சுற்றுப் பயணத்தின் போது தனக்குப் பயன்பட்ட ''ராஜ் ஹான்ஸ்'' என்ற இராணுவ விமான பைலட்டுகளுக்குத் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கொண்டார். 14 விமானிகளைக் கொண்ட அக்குழுவினரை ஆசிர்வதித்தார். உடனிருந்து உவப்போடு படம் பிடித்துக்கொண்டார்.

அந்த 10 நாட்களில் - புதுடில்லி, ராஞ்சி, கல்கத்தா, ஷில்லாங், சென்னை, கோவா, கேரளம் போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள 13 நகரங்களுக்குப் போப்பாண்டவர் சென்றார். 45 நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். 35 உரைகள் நிகழ்த்தினார்.

அப்போது அவர்-''கிறிஸ்தவ மதத்தினர் எங்கு வாழ்ந்தாலும் அப்பகுதியின் சமூக, கலாச்சார வழிமுறைகளைப் பின்பற்றி அந்த நாடுகளைத் தங்கள் சொந்த நாடுகளாகக் கருதி வாழவேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். ''சமாதானம் உங்களோடு இருப்பதாக'' என்று தமிழில் கூறி, உரையை முடித்தார்.

இந்நிகழ்ச்சியின் இடையிடையில், மேடைக்கு இடதுபுறம் உயரே அமைக்கப்பட்டிருந்த நீண்ட மேடை மீதிருந்த திருச்சி செயின்ட் ஜோஸப் கல்லூரி பிராஸ் பேண்ட் குழுவினைச் சேர்ந்த 500 மாணவ மாணவிகள் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினார்கள்.

அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும், சட்டப்பேரவை மேலவை-நாடாளு மன்ற உறுப்பினர்களும் இந்நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள்.



### வழியனுப்பு நிகழ்ச்சி

இக்கூட்டத்திலிருந்து புறப்பட்டு 7.10க்கு மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேர்ந்தார் போப்பாண்டவர். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் போப்பாண்டவரை வரவேற்று அழைத்து வந்தார்.



மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா மாலையணிவித்தார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் போப்புக்கு மாலையணிவித்து மார்புறத் தழுவினார்.

''நீங்களும் உங்கள் குடும்பத்தாரும், எல்லாச்செல்வமும் நலமும் பெற்றுப்பல்லாண்டுவாழ்க'' என்று அப்போது போப்பாண்டவர் வாழ்த்தினார்.

இந்துக் கோயில், கிறிஸ்தவ ஆலயம், முஸ்லீம் மசூதி ஆகியவைகளின் வடிவங்கள் வெள்ளியினால் செய்யப்பட்ட பரிசையும், திருக்குறள் ஆங்கிலப் பதிப்பையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் போப்பாண்டவருக்குத் தமிழக அரசு சார்பில் பரிசுகளாக வழங்கினார். அப்பரிசு வைக்கப்பட்ட கண்ணாடிப் பேழையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கையெழுத்தும், அதையடுத்து

'நயனொடு நன்றி புரிந்த
பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு'

என்ற திருக்குறளும் பொறிக்கப்பட்டிருந்தன.

''உலகத்தில் இதுவரை நான் காணாத - வரலாறு காணாத வரவேற்பு இது'' என்று தமிழ்நாடு தமக்களித்த வரவேற்பை மிகவும் வியந்து சிறப்பித்துக் கூறிய போப்பாண்டவர், இதன் பின் விமானத்தில் கோவாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

—பி.எல். ராஜேந்திரன்.





# தென்னகப் பண்பாட்டு மையம்



தமிழ்நாடு, ஆந்திரம், கர்நாடகம், கேரளம், புதுவை ஆகிய மாநிலங்கள், அந்தமான், நிகோபார், லட்சத்தீவு ஆகிய பகுதிகள் சார்பில் தென்னக பண்பாட்டு மையம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன் தொடக்க விழா தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திருவையாற்றில் சீனிவாசராவ் மேல்நிலைப் பள்ளித் திடலில் 31.1.86 அன்று மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் பண்பாட்டு மையத்தைத் தொடங்கி வைத்தார்.

ஹெலிகாப்டரின் மூலம் தஞ்சை விளையாட்டுத் திடலை வந்தடைந்த மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு, ஜவ்வாது கலந்த சந்தன மாலையை அணிவித்து வரவேற்றார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

பிரதமர், விழா நடைபெறும் திடலுக்கு வருகைபுரிந்தபோது திருவையாறு இசைக் கல்லூரி மாணவர்கள் நாயன இசை விருந்தளித்து வரவேற்றனர். பிரதமருக்கு, பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது.

பள்ளி மாணவ மாணவியர், பலப்பல மாநில மக்களின் உடைகளை அணிந்தவாறு, மலர் தூவி பிரதமருக்கும், முதல்வருக்கும் திலகம் வைத்து வரவேற்றனர்.

இசைமணி சீர்காழி கோவிந்தராஜன் கடவுள் வாழ்த்துப் பாட, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் விழாவுக்கு வந்திருந்த பிரதமரையும் ஏனைய பொதுமக்களையும் வரவேற்றுப் பேசினார்.

பின்னர், மாண்புமிகு பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் தென்னகப் பண்பாட்டு மையத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். அவரது ஆங்கில உரையை மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு ப. சிதம்பரம் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்தார்.

பிரதமர் அவர்களின் உரையின் சில பகுதிகள் வருமாறு:

"இங்கு தொடங்கப்படுவது இந்தியாவின் மூன்றாவது பண்பாட்டு மையமாகும். இது ஒரு பகுதி அல்லது மண்டலத்தில் உள்ள அனைத்துப் பண்பாட்டுச் செல்வங்களையும் ஒன்று சேர்க்க உதவும்.

"இதன் நோக்கம் ஒருவரை ஒருவர் மேலும் நன்றாகப் புரிந்து கொள்ளவும் நம் செல்வங்களைச் சேகரித்து வைக்கவும், அதன் அடிப்படையில் கலைகளை சிறப்பாக வளர்க்கவும், நமது சந்ததிகளுக்குச் சிறந்த கலைச் செல்வங்களைக் கொடுக்கவும் உதவும். இந்த மையம் நம்மிடையே இருக்கும் எல்லாச் செல்வங்களையும் ஒன்று திரட்ட


வும் மறைந்து கிடக்கின்ற திறமைகளை - புலமைகளைத் தேடிக் கண்டுபிடிக்கவும் உதவும்.

''இந்த மையங்கள் வாயிலாக நம்நாட்டில் சிறந்த இசைக் கலைஞர்கள் ஒரு இடத்தில் கூடித் தங்கள் சிறப்புகளை- திறமைகளை வெளிப்படுத்த உதவும். சாதாரண மக்கள் இடையே கலைகளைப்பரப்பவும், அவர்களுக்கு அந்தக் கலைச்செல்வங்களை அறிமுகப்படுத்தவும் உதவும்.

''மகான் தியாகராஜர் வாழ்ந்த இந்த புண்ணியபூமியான திருவையாறில் இசைக்காக ஒரு துணை மையம் அமைந்து செயல்படு

தியாகராஜர் மூலமாகத் திருவையாறில் சங்கமித்து இருக்கின்றன. இதைவிட இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கு வேறு சிறந்த உதாரணம் இருக்கமுடியுமா?

''இதுபோன்ற மையங்களை இந்தியாவில் மேலும் 7 இடங்களில் அமைக்க இருக்கிறோம். அடுத்த ஆண்டு டெல்லியில் மிகப் பெரிய தேசிய கலை விழாவை நடத்த இருக்கிறோம். அதைத் தொடர்ந்து, இந்தியாவின் பல மாநிலங்களிலும் கலை, இசை விழாக்கள் நடத்தப்போகிறோம். அந்த விழாவில் எல்லாக் கலைஞர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்பது என்னுடைய விருப்பம் ஆகும்.



மாண்புமிகு பிரதமர் தமது உரையை முடித்ததும், அவரிடம் தஞ்சாவூர் வீணையை நினைவுப் பரிசாக வழங்கினார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

''அழகிய வீணையைத் தமிழ் நாட்டு மக்களின் சார்பில் முத



கிறது. இந்த மையங்கள் தேசிய ஒருமைப்பாடு உணர்வை வளர்க்கவும், எல்லா மக்களையும் ஒன்று சேர்க்கவும் உதவும் என்று நம்புகிறேன்.

''தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஒரு நல்ல-சிறந்த எடுத்துக்காட்டாக திருவையாறு விளங்குகிறது. கர்நாடக இசைக்குத் திருவையாறு ஒரு முக்கிய இடமாகும்.

''தியாகராஜர், தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்தார். தான் இயற்றிய பாடல்களைத் தெலுங்கில் எழுதினார். அவருடைய பாடல்களில் ஒன்றான 'எந்தரோ மகானு பாவலு' என்ற பாடல் கேரள புலவர் கோவிந்தம்மா பாடலின் அடிப்படையில் உருவானது. தியாகராஜரின் மாணவி கர்நாடகத்தைச் சேர்ந்த பெங்களூர் நாகரத்தினம்மாள். இப்படி எல்லா மாநிலங்களும்

''ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் நான்கு ஐந்து வாரங்கள் தேசிய அளவிலான கலை, பண்பாட்டு விழா நடத்த இருக்கிறோம்.

''நாட்டில் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த கலைஞர்கள், டெல்லியில் வந்து திறமைகளை வெளிக்காட்டமுடியும். அவர்கள் தங்களுடைய கலையைப் பற்றிய கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து கொள்வதன் மூலம் நாடு தழுவிய கலை, பண்பாட்டு எழுச்சியை ஏற்படுத்த முடியும்.


''இந்தப் பண்பாட்டு மையம் மூலம் நமது பண்பாடு, கலாச்சார விழிப்புணர்ச்சி நன்கு வளரும். இந்த மையத்திற்கு என்னுடைய வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

லமைச்சர் கொடுத்திருக்கிறார். அடுத்தமுறை நான் வரும்போது வீணையை வாசிப்பேன்'' என்று கூறிய பிரதமர் அவர்கள், வீணையின் நரம்புகளை மீட்டி ஓசை எழுப்பி, மையத்தைத் தொடங்கி வைத்தார்.

தொடக்க விழா முடிந்த பின்னர், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், புதுவை, அந்தமான் நிகோபார் தீவுகளைச் சேர்ந்த கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றை மிகவும் ரசித்துப் பார்த்தார் பிரதமர்.

தென்னகப் பண்பாட்டு மையத் தொடக்க விழா, முத்திரை பதித்த விழாவாக அமைந்து விட்டது.

—சுந்தர்



# கோவையில்

# மகளிர் விளையாட்டுப் போட்டிகள்

மகளிர் இன்று அனைத்துத் துறைகளிலும் சாதனைகள் புரிந்து வருகின்றனர். அதுவும் குறிப்பாக விளையாட்டுத் துறையில் இன்று பெருமைமிகு சாதனைகள் படைத்து வருகின்றனர். இதனால் விளையாட்டுத்துறையில் இவர்களது ஆற்றலை வளர்க்கவும் ஆர்வத்தை ஊக்குவித்திடவும் இதுபோன்ற தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

1975ஆம் ஆண்டு உலகம் முழுவதும் சர்வதேச மகளிர் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. இவ்வாண்டினையொட்டி மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் பெண்களுக்கான தேசிய விளையாட்டுப் போட்டியை நடத்துமாறு ஆணையிட்டதற்கேற்ப இவ்விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டிகள் 1983ல் குஜராத்தில் நடைபெற்றது. 1984ல் இப்போட்டிகள் புதுடில்லியில் நடைபெற இருந்தது. ஆனால் மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் மறைவால் நடத்தப்படவில்லை.

இந்த ஆண்டு 10வது தேசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வாய்ப்பு தமிழ்நாட்டுக்குக் கிடைக்கப் பெற்றது. இப்போட்டிகள் கொங்கு நாட்டின் தலைநகர் கோவைமாநகரில்சிறப்போடு நடைபெற்றதோடு தமிழ்நாடு சாம்பியன் ஷிப் பெற்றதும் பெருமைக்கும் சிறப்புக்கும் உரிய அம்சமாகும்.

தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் 27.12.85 முதல் 31.12.85 வரை நடைபெற்றன. இப்போட்டிகளில் 25 மாநிலங்களிலிருந்து 2,500க்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்கு பெற்றனர். கோவையில் நேரு விளையாட்டு அரங்கிலும் மற்றும் பல்வேறு திடல்களிலும் அத்லடிக்ஸ், கைப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து, ஜிம்னாஸ்டிக், டென்னிஸ், டேபிள் டென்னிஸ், கோகோ, கபடி, எறிபந்து, ஆக்கி மற்றும் ஜூடோ முதலான 12 விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. நீச்சல், கால்ப் முதலிய 2 விளையாட்டுப்போட்டிகள் சென்னையில் நடைபெற்றன.

27.12.85 அன்று தேசிய பெண்கள் விளையாட்டுப் போட்டிகள் மாண்புமிகு கல்விஅமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

தொடக்க விழாவிற்கு முன்பாக சீருடை அணிந்த 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர்கள் பங்கு பெற்ற கண்கவர் ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தின் முன்பாக தாரை தப்பட்டைகள் முழங்க பல வண்ணக் கொடிகளுடன் அலங்கரிக்கப்பட்ட வண்டி வந்தது. இதனைத் தொடர்ந்து சீருடை அணிந்த மாணவ மாணவியர்கள் அணிஅணியாக அணிவகுத்து வந்தனர். தொடர்ந்து 20க்கும் மேற்பட்ட அலங்கார வண்டிகள் வந்தன. விளையாட்டுப் போட்டியை எடுத்துக் காட்டும் வகையில் கூடைப்பந்து, கைப்பந்து, பூப்பந்து விளையாடுவதுபோன்றும், பாரதியாரின் புதுமைப்பெண், தாகூரின் கீதாஞ்சலி, செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார், கொடிகாத்த திருப்பூர் குமரன், சிலப்பதிகாரக் காட்சி,

கல்வியின் அவசியத்தை விளக்கும் குருகுலக்காட்சி, இந்தியாவின் ஒற்றுமை, தொழிற்கல்வியின் பயன், அணுசக்தியின் பயன் முதலானவற்றை விளக்கும் வகையில் அலங்கார வண்டிகள் வந்தன. இந்த ஊர்வலம் கோவை பவர் அவுசிலிருந்து புறப்பட்டு நேரு விளையாட்டரங்கிற்கு வந்தது.

நேரு விளையாட்டரங்கில் தொடக்க விழா நடைபெற்றது. காவல் துறையினர் இன்னிசை முழங்கி முன் செல்ல தொடர்ந்து 25 மாநிலங்களையும் சேர்ந்த வீராங்கனைகள் அணி வகுத்து வந்தனர். ஒவ்வொரு அணியினரும் அவரவர் கலாச்சாரத்திற்கேற்ப உடையணிந்து அவர் தம் மாநிலங்கள் பெயர் பொறித்த அட்டைகளையும் ஏந்தி வந்தனர். இவர்கள் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பா.சிவந்தி ஆதித்தன் வரவேற்றார்.

இவர் தனது உரையில், ''தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சீரிய தலைமையில் தமிழக அரசு, விளையாட்டு வீரர்களுக்கும், விளையாட்டுத் துறையில் பங்கு பெறுபவர்களுக்கும் நல்ல முறையில் ஆர்வத்தை அளித்து வருகிறது. முதல்வர் எம்.ஜி.ஆர். இந்தப் பெண்கள் விளையாட்டுப் போட்டியைத் தொடங்கிவைப்பது விளையாட்டுத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் புத்துணர்ச்சியை அளிக்கிறது. இப்போட்டியை 1975ல் தொடங்கிய போது குறைந்த அளவிலான மாநிலங்களும், 9 விளையாட்டுப் போட்டிகளும்மட்டுமேநடைபெற்றன. ஆனால் இந்த 10வது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் 25 மாநிலங்களைச் சேர்ந்த அணிகளும், 14 விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றன'' என்று குறிப்பிட்டார்.

இத்தொடக்க விழாவிற்குத் தலைமை ஏற்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தனது உரையில், ''விளையாட்டுத் துறைக்காக தமிழ்நாடு அரசு அதிகமாகப் பணம் ஒதுக்கீடு செய்து வருகிறது. இதில் புதிய திட்டங்களை அமல்படுத்துவதன்மூலம் தமிழகம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும். இப்போட்டியில் 2,500க்கும் மேற்பட்ட வீராங்கனைகள் பங்கு பெறுவது பாராட்டத்தக்கதொரு அம்சமாகும். முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். விளையாட்டில் அதிக ஆர்வம் கொண்டுள்ளார்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள், ''நான் இந்த விளையாட்டுப் போட்டியைத் தொடங்கி வைக்கிறேன்'' என்று தனது உரையில் குறிப்பிட்டார். இவ்விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்றுள்ள அனைத்து வீராங்கனைகளுக்கும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் வழங்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் விளையாட்டுப்போட்டியைத்தொடங்கி வைப்பதற்காக வெள்ளை நிறப் புறாக்களைப் பறக்க விட்டார். தொடர்ந்து வெண் புறாக்களும், வண்ணப் பலூன்களும் பறக்கவிடப்பட்டன. பட்டாசுகள் கொளுத்தப்பட்டன.

இதன் பிறகு விளையாட்டுத் தீபம் ஏற்றப்பட்டது. முதலில் தமிழக வீராங்கனை அன்னம்மாள் தீபத்தினை எடுத்துக் கொண்டு ஓடி வந்தார். இவரிடமிருந்து தொடர் ஓட்டம் மூலம் கோவை பி.எஸ்.ஜி.ஆர். விளையாட்டுப் பயிற்சிப் பள்ளிக்கூட மாணவி தாப்னா அந்த ஜோதியைப் பெற்று விளையாட்டுத் தீபத்தை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து விளையாட்டு வீராங்கனைகள் உறுதி மொழி ஏற்றனர். தமிழக வீராங்கனை ஜாஸ்மின் உறுதிமொழியினை வாசிக்க, இவரைத் தொடர்ந்து அனைத்து வீராங்கனைகளும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

பள்ளி மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. கரகம், காவடி, பாங்கரா நடனம், பரத நாட்டியம், ஜிம்னாஸ்டிக், ஜூடோ முதலானவை நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் தொடங்கின. மாநில விளையாட்டுத்துறை இயக்குநர் திரு ஆர்.நாகராஜன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மு. அபுல்ஹசன் இ.ஆ.ப., அவர்கள் தொடக்க விழாவிற்கான பணிகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

27.12.85 முதல் 31.12.85 வரை 12 விளையாட்டுப் போட்டிகள் நேரு விளையாட்டரங்கிலும், வேளாண் பல்கலைக்கழகம், மணி மேல் நிலைப்பள்ளி, ஸ்டேன்ஸ் மேல்நிலைப்பள்ளி, பெர்க்ஸ் பள்ளி, காவலர் பயிற்சிப் பள்ளி, ஆபிசர்ஸ் கிளப், சிட்டி கிளப் மற்றும் நேரு விளையாட்டரங்கினைச் சுற்றியுள்ள வ.உ.சிதம்பரனார் பூங்கா திடல்களிலும் நடைபெற்றன.

31.12.85 அன்று பெண்களுக்கான 10வது தேசிய விளையாட்டுப் போட்டிகள் 1985ன் நிறைவு



விழா நேரு விளையாட்டரங்கில் நடைபெற்றது. விளையாட்டு நிதிக் குழுத் தலைவர் திரு.ஜி. கே.சுந்தரம் அவர்கள் விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்றார். திரு சித்தா சீனிவாசன் அவர்கள் விழாத் தலைமை ஏற்றார். தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. பா. சிவந்தி ஆதித்தன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசுகள் வழங்கினார். நிறைவு விழாவில் காவல் துறையினர் இன்னிசை மீட்டி முன்செல்ல தொடர்ந்து 25 மாநிலங்களின் அணித் தலைவிகள் தங்கள் மாநில கலாச்சாரத்திற்கேற்ப உடையணிந்து கொடி பிடித்து வீறுநடைபோட, தொடர்ந்து வீராங்கனைகள் அணிவகுத்து வந்தனர்.

அனைத்துப் போட்டிகளிலும் அதிகப் புள்ளி எடுத்த தமிழ்நாடு அணிக்கு 10வது பெண்கள் தேசிய விளையாட்டுப் போட்டியின் ''சாம்பியன் ஷிப்'' பட்டம் கிடைத்தது. தமிழ்நாடு இப்பட்டத்தினை முதன்முதலாகப் பெறுகிறது. மாநில விளையாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பா.சிவந்தி ஆதித்தன் அவர்கள் இப்பட்டத்திற்கான கேடயத்தினை மாநில விளையாட்டுப் பயிற்சித் துறை இயக்குநர் திரு ஆர். நாகராசன், இ.ஆ.ப. அவர்களிடம் வழங்கினார்.

கோவையில் நடைபெற்ற பெண்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு 13 தங்க மெடல்களையும், 11 வெள்ளி மெடல்களையும், 7 வெண்கல மெடல்களையும் ஆக 31 மெடல்களைப் பெற்று சாம்பியன் ஷிப் பட்டத்தினைப் பெற்றது.

மேற்கு வங்காளம் 8 தங்கம், 9 வெள்ளி, 3 வெண்கலம் ஆக 20 மெடல்கள் பெற்று இரண்டாம் இடத்தினைப் பெற்றது.

கர்நாடக மாநிலம் 10 தங்கம், 4 வெள்ளி, 4 வெண்கலம் ஆக 18 மெடல்கள் பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது.

பல்வேறு போட்டிகளில் தங்கப் பதக்கம் பெற்ற வீராங்கனைகளுக்குத் தையல்மிஷின்,எச்.எம்.டி. கைக்கடிகாரம், பூட்ஸ் முதலானவையும் வழங்கப்பட்டன.

போட்டிகளில் பங்கு பெற்ற வீராங்கனைகள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தபடி ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

விளையாட்டுப் போட்டியையொட்டி வெளியிடப்பட்ட விழா மலரினை திரு பா.சிவந்தி ஆதித்தன் அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.மு. அபுல் ஹாசன், இ.ஆ.ப., அவர்கள் பெற்றுக் கொண்டார்.


இறுதியில் மாநில விளையாட்டுப்பயிற்சித்துறைஇயக்குநர் திரு ஆர். நாகராசன், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

**தொகுப்பு:**

**எஸ். நாகராசன்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**

**கோவை மாவட்டம்.**





# ஜீவா ஜெட்டின் சிறப்பம்சங்கள்

தமிழக அரசு நிறுவனமான ஜீவா போக்குவரத்துக் கழகம் அண்மையில் இது வரை யாருமே செய்திடாத முறையில், காற்றுத்தடையினைக் குறைத்திடும் வகையில் விமான ஊர்தி இயக்கக் கோட்பாடுகட்கு ஏற்ப, புதிய பேருந்துக் கூடு கட்டும் வடிவமைப்பினை அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய கூடு கட்டும் வடிவமைப்பு முயற்சியில் இது புதிய சகாப்தத்தைத் துவக்கியுள்ளது. இன்னமும் மேற்கொள்ளப்படவிருக்கும் புதிய கண்டுபிடிப்புகளின் முதற்படியே இது. இதன் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

- விமான ஊர்தி இயக்கக் கோட்பாடுகளை அனுசரித்துக் கூடு கட்டப்பட்டுள்ளதால் டீசல் குறைவாகச் செலவாகும்.

- பேருந்தின் எடுப்பான தோற்றத்திற்காக முன்பகுதியான, விமான ஊர்தியின் மூக்குப்போன்று தோன்றும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் காற்றுத்தடையைக் குறைப்பதற்காக இரு பக்கக் கண்ணாடியும், லாவகமான வளைவுகளுடனும் பொருத்தப்பட்டுள்ளன.

- இதன் முழு வடிவமைப்பும், துருப்பிடிக்காத வண்ணமும், பேருந்து இயங்கும் பொழுது ஒலி எழாவண்ணமும் அமைக்கப்பட்டுள்ளது.

- பேருந்தின் உட்புறம் வெப்பத்தைத் தணிக்கும் வகையில் மிருதுவான பொருள்களாலும், அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய வழவழப்பான வண்ணப் பலகைகளாலும் பொருத்தப்பட்டுள்ளது.

- பேருந்துகளின் பக்கவாட்டில் குளுமை வழங்கும் கண்ணாடிகள் பொருத்தப்பட்டுள்ளன.

- சாய்மான ஏற்பாடுகளைக் கொண்ட 35 இருக்கை வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

- சாமான்கள் வைக்கும் பகுதியின் உயரே படிப்பதற்கு ஏதுவாக விளக்கும், தேவையானால் நடத்துநரை அழைத்திட ஏதுவாக சிவப்பு பட்டனும், சுவிட்சும் பொருத்தப்பட்டுள்ளன.

- காற்றோட்ட வசதிக்காக உட்புறம் போதிய விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன.

- பேருந்தின் அலங்காரத் தோற்றத்திற்காக விமான ஊர்தியினைப் போலவே பின்னால் இறகுகள் வைக்கப்பட்டுள்ளன.

- டயர்கள் குளுமையாக்கப்படவும், விமான ஊர்தி போன்று காட்சிதரவும், 3'' அகல பைப் முன் பகுதியிலிருந்து பேருந்தின் பின்பகுதி வரையும், அதே போன்று பின்பகுதியிலிருந்து இறகுகளின் இறுதி வரையும் பொருத்தப்பட்டுள்ளது' பேருந்து இயக்கத்தின்பொழுது டயர்கட்குக் குளிர்ச்சியான காற்றுக் கிடைத்திடுவதோடு கூடுதலான கிலோ மீட்டரும் கிடைத்திட ஏதுவாகின்றது.

- பயணிகள் இல்லா நிலையில் பேருந்தின் எடை 8,350 கிலோ ஆகும். பேருந்தின் நீளம் 12.4 மீட்டர். அகலம் 2.5 மீட்டர்.

- பேருந்தினை வடிவமைக்க ஆகிடும் தோராயச் செலவு ரூபாய் 1.75 இலட்சம்.

- பயணிகள் ஏறும் வழியிலும், ஓட்டுநர் ஏறும் வழியிலும் ஓட்டுநர் நன்முறையில் பார்ப்பதற்கு ஏதுவாகக் கண்ணாடி பொருத்தப்பட்டு முழுக்கதவுகள் பொருத்தப்பட்டுள்ளன.

- பேருந்தின் பின்புற அமைப்பு, காற்றுத் தடையினைத் தவிர்க்க விமான ஊர்தியினைப் போன்று அமைக்கப்பட்டுள்ளது.

- பேருந்தின் அடித்தளத்தில் கட்டம் போட்ட அலுமினியத் தகடு பொருத்தப்பட்டு, அதன்மேல் ரெக்சினும், கம்பள விரிப்பும் பரப்பப்பட்டுள்ளன.

இந்தப் பேருந்து கூடு கட்டும் வடிவமைப்பு ஜீவா போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு. இராமகிருஷ்ணன் அவர்களால் பேருந்து வடிவமைப்பில் இதுகாறும் யாரும் செய்திடாத புதுமையைப் படைத்திட வேண்டும் என்று மேற்கொண்ட இடைவிடா முயற்சிகள் விளைவாகப் பெரியார் மாவட்டத் தலைமையிடமான ஈரோட்டில் உள்ள ஜீவா போக்குவரத்துக் கழகத் தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டது.

**கா. சம்சுதீன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்.**



# நெல்லை மாவட்டத்தில் காற்று அரிப்புத் தடுப்பு

திருநெல்வேலி மாவட்டத்தின் கடலோரப் பிரதேசங்களில் காணப்படும் முக்கியப் பிரச்னை காற்று அரிப்பு ஆகும். இதன் விளைவு ஓரிடத்திலிருந்து மேல் மண் பெயர்ந்து அதுவே மற்றொரிடத்தில் படிதலே. மண் வெறுமையாகவும், தனிமையாகவும் வரண்டு துகளாகவும் இருக்கின்ற நிலையில் வீசுகின்ற காற்றினால், மண்ணரிப்பு ஏற்படுகின்றது. தடையில்லாத நிலையில் காற்றானது அதிக வேகம் பெறுகின்றது. இது மண் அரிப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கு வழிவகுக்கிறது.

தென்மேற்குப் பருவகாலத்தில் கேரளப்பிரதேசத்தில் நீர்த்துகள்களால் நிறைவுற்ற மேகங்கள் குறைந்த அழுத்த நிலப்பகுதியை நோக்கிச் செல்கின்றன. இந்த மேகங்கள் மேற்குத் தொடர்ச்சியின் குளிர்ந்த மலைகளினால் தடுக்கப்பட்டு, கேரளப் பிரதேசத்திலேயே மழையாகப் பொழிகிறது. இதன் முடிவாக மேகத்திலுள்ள ஈரம் அகன்ற வறண்ட வெப்பமான காற்று மணிக்கு 40 கி.மீ. முதல் 60கி.மீ. வேகத்துடன் திருநெல்வேலி மாவட்ட கடலோரப் பிரதேசங்களை நோக்கி வீசுகிறது.

தடையேதுமற்ற நிலையில் அதிக வேகம் பெற்ற இக்காற்று வீடுகள், மரங்கள் போன்ற நிலையான தடைகளுடன் மோதும் போது சுழற்சியடைகின்றது. மேலும் தெற்கிலிருந்து வீசும் காற்றானது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வீசுகின்ற காற்றோடு மோதி அதிகப் புழுதிச் சுழற்சியை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக வறண்ட மண் துகள்கள் காற்றின் வேகத்தினாலும், சுழற்சியாலும் மேலே கொண்டு செல்லப்படுகின்றன.

அங்கக (Organic) பொருட்கள் இல்லாத மண் துகள்கள் வெகுவாக இடம் பெயர்ந்து, அருகிலிருந்து அதற்கீடான மண்ணையும் இடம்பெயர்த்துஊர்ந்து செல்கிறது. இவ்வாறு எடுத்துச் செல்லப்பட்ட மண் துகள்கள் எங்கே காற்றின் வேகம் குறைகிறதோ அங்கே வீழ்கின்றன. காலத்திற்குக் காலம் மண் பெயர்கின்ற இடமும், படிகின்ற இடமும் மாறுகின்றது. இம்மண்ணின் நிறம் சிவப்பு ஆகும். இவ்வாறு படிந்துள்ள மண்ணின் நீர் உறிஞ்சும் திறன் (Infiltration Capacity) அதிகமாயிருப்பதால் இங்கு சாகுபடி செய்வது அவ்வளவு எளிதல்ல.

**கே. சின்னசாமி,**
**உதவிச்செயற் பொறியாளர்,**
**காற்றரிப்புத் தடுப்புத் திட்டம்,**
**திருச்செந்தூர்.**

ஆண்டின் பெரும்பகுதியில் தேரிநிலங்கள் காற்றின் அதிக வேகத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. இத்தேரி நிலங்களில் பனையின் ஆதிக்கமே அதிகம். அம்மரங்கள் போதுமான தாவரப் போர்வையை நிலத்திற்கு அளிப்பதில்லை. இதனால் காற்று அரிப்பிலிருந்து மேல் மண் காக்கப்படுவதில்லை. போதுமான மழையின்மை,குறைந்த மழை நாட்கள், அதிவேகக் காற்று, மண்ணின் குறைந்த நீர்ப்பிடிப்புத் தன்மை (Retentivity), தாவரச்சத்து இழந்த மண் ஆகியவை, மரங்கள் தொடர்ந்து நன்கு வளருவதற்குத்தடையாக உள்ளன. மேற்கூறப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு நீர் மூலாதாரம் (Source) உண்டாக்குதல், தாவர அரண்கள் மற்றும் காற்றுத்தடை உண்டாக்குதல், கரம்பை இடுதல், அங்கக (Organic) உரங்கள் இடுதல் ஆகியவை அவசியமாகும். இப்படிப்பட்ட வளர்ச்சிகரமான முன்னேற்றத்திற்கு நீண்ட கால மூலதனம் தேவைப்படுவதாலும், சம்பந்தப்பட்ட விவசாயிகள் இதைச் செய்ய அவர்களது பொருளாதார நிலை இடமளிக்காததனாலும் தேரிநிலங்கள் விவசாயிகளால் கைவிடப்பட்டு வெறுமையாய்க் கிடக்கின்றன. இம்மாதிரி நிலங்களின் பரப்பு 20,000 எக்டருக்கும் மேலாகும்.

இப்படியாக அதிகமாகக் காற்று அரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களை மேற்கொண்டும் பாதிப்பிலிருந்து தடுக்கவும், பாதிக்கப்பட்ட இடங்களைச் சீர்படுத்தவும் தமிழ்நாடு அரசு,வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் 1978ல் திருநெல்வேலியைத் தலைமை இடமாகக் கொண்டு ஓர் திட்ட அலுவலகமும், திருச்செந்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஓர் உதவிச்செயற் பொறியாளர் அலுவலகமும் அமைத்து, காற்று அரிப்புத் தடுப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது.

காற்று அரிப்புத் தடுப்பிற்கான எந்த ஒரு திட்டமும், வீசுகின்ற காற்றுக்குச் சில தடைகளை உண்டாக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். காற்றின் திசைக்குக் குறுக்கே தடுப்புகள் (அரண்கள்) உண்டாக்கப்படலாம். இந்தத் தடுப்புகள் தாவர வகையில் பயன்தரத்தக்க மரங்களாகவும் செடிகளாகவும் காற்றின் திசைக்கு குறுக்கே வரிசையாய் தகுந்த இடைவெளிவிட்டு நடப்பட வேண்டும். இவ்வகைத் தாவர அரண்களில் இடம் பெறும் தாவர வகைகள், அவைகளின் துரித வளர்ச்சித் தன்மை,வறட்சி மற்றும் காற்றின் கடினத் தன்மையைத் தாங்கும் திறன், சுற்றுப்புற சூழ்நிலைகளைத் தாங்கும்

சக்தி, இதர தாவரங்களுடன் இணைந்து வளரும் பண்பு, அவைகளின் ஆயுள், இலையுதிர் நிலை, பயனுறும் தன்மை ஆகியவற்றைக் கொண்டு நிர்ணயிக்கப்பட வேண்டும். நடப்பட்ட தாவர அரண்கள், காற்று, நிலப்பரப்பை அண்டாதபடி திசை திருப்பக் கூடியதாக இருக்க வேண்டும். நன்கு வளர்ந்த தாவர அரண்களின் குறுக்கு வெட்டுத்தோற்றம் கூம்பு வடிவமாயிருக்கும்படி அமைய வேண்டும்.

எனவே, தாவர அரண்கள் நடுவே உயரமாகவும் விரைந்தும் வளரக் கூடிய மர வகைகளாலும் அடர்த்தியாக வளரக்கூடிய தாவரவகைகள் அதனிரு பக்கங்களிலும் நடப்பட்டு உண்டாக்கப் படுகின்றன. தாவர அரண்களில் வரிசைகளின் எண்ணிக்கை, நிலத்தின் பரப்பு மற்றும் பாதுகாக்கப் படவுள்ள பயிர்களின் மதிப்பு ஆகியவற்றைப் பொறுத்தது.

இத்தாவர அரண்கள் தேவைக்கு மேல் கூடுதல் அடர்த்தியாக இருக்கக்கூடாது. இது அதிகமான சுழற்சியை ஊக்குவிக்கும். எனவே தாவர அரண்கள் சிறிதளவு காற்று உட்புகும் படிக்குத் திறந்த வெளியுடையதாக ( Openners ) இருக்க வேண்டும். சிறந்த தாவர அரண் 5 விழுக்காடு திறந்தவெளி கொண்டதாயிருத்தல் வேண்டும். காற்றின வேகம் தாவர அரண்களின் உயரத்தினைப் போல் ஐந்து மடங்கு தூரம் காற்று வீசும் திசையிலும், உள் திசையின் அரண்களின் உயரத்தைப் போல் 15 மடங்கு தூரத்திற்கும் கட்டுப்படுத்தப் படுகிறது. வீசும் காற்றானது நிலப்பரப்பிலிருந்து தாவர அரண்களினால் திருப்பப்பட்டு , நிலப் பரப்பில் ஒரிடத்தை நெருங்க முயற்சி செய்கிறது. இவ்விடத்தில் திசை திரும்பும் செயல் குறைவாகவும் காற்றானது அதிக வேகத்தையும் அடைந்திருக்கக் கூடும். இவ்விடமே அடுத்த தாவர அரண் அமைக்கப்பட வேண்டிய இடமாகும்.

இதுபோல் தாவர அரண்களின் தொகுப்பு காற்றரிப்பை விரைவில் தடுப்பதற்குத் தேவையாக இருக்கிறது. தாவர அரண்களின் நீளம் எப்பொழுதும் அரை மைலுக்குக் கூடுதல் இருக்கவேண்டும். தாவர அரண்கள் காற்றரிப்பின் கடுமையைப் பொறுத்து ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, அல்லது ஏழு வரிசைகள் கொண்ட தொகுதிகளாக இருக்கும்.

முதற்கட்டமாகத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள, திருச்செந்தூர், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், சாத்தான்குளம், ராதாபுரம், நான்குனேரி வட்டங்களிலுள்ள விளைநிலங்களைக் காற்று அரிப்பிலிருந்து பாதுகாப்பதே யாகும்.


இவ்வட்டங்களில் பாதிக்கப் பட்டுள்ள பரப்பு, நில அளவு செய்யப்பட்டு ஆண்டு நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இடம் தெரிவு செய்து காற்றின் திசைக்குக் குறுக்கே தாவர அரண்கள் வளர்க்கப்படுகின்றன. இத்தாவர அரண்கள் சுற்றுப்புறத்திற்குப் பயன்படக் கூடிய தக்க செடிகள் மற்றும் மரங்கள் ஆகியவைகளை ஐந்து வரிசைகளில் கொண்டவை. இவைகள் மாறுபட்டவளர்ச்சி விகிதமும், கிளைகள் அளவும், அமைப்பும், உயரமும் கொண்டவை.

தகுந்த தாவரங்கள் மற்றும் செடிகள் தேர்ந்தெடுப்பதற்குரிய அடிப்படையான அம்சம் இயன்ற அளவு காற்றுக் கெதிராகப் பாதுகாப்புக்கொடுக்கக்கூடிய தன்மை மற்றும் அந்தந்தப் பகுதியில் வளரக்கூடிய வகைகளாவும், பொருளாகாா மதிப்புடையதாயுமிருப்பதாகும். அதிக வறட்சி மற்றும் காற்றின் அதிவேகத்தையும் தாங்கக் கூடிய திறன் ஆகியவையே. தாவர அரணின் அகலம் தேவைக்கேற்ப 10-20 மீட்டர் ஆகும். இரு தாவர அரண்களுக்கு இடையே உள்ள தூரம் 160 மீட்டர் ஆகும்.

முதல் வரிசையில் குத்துச் செடிகள் நடப்படுகின்றன. இவை தரைமட்டத்திலே ஒரு சிறந்த தாவரத் தடுப்பைக் கொடுப்பதோடு அதனைத் தொடர்கின்ற வரிசையிலுள்ள தாவரங்களையும் காற்றின் பிடியிலிருந்து பாதுகாக்கிறது. இவை விரைவில் வளர்வதால் எளிதில் உண்டாக்கப்படுகின்றன. இரண்டாவது வரிசை விரைவில் வளரக்கூடியதும் சற்றே உயரம் குறைவான அடர்த்தியான வகைகளாவும் நடப்படுகிறது. மூன்றாவது வரிசை அல்லது மத்திய வரிசை விரைந்து உயரமாக வளரக்கூடிய மரங்களால் ஆனது. நான்காவது வரிசை மூன்றாவது வரிசை மரத் தொகுதியை விட உயரத்தில் குறைவாகவும் அடர்த்தியானதாகவும் இருக்கும். கடைசி (ஐந்தாவது) வரிசையில் முதல் வரிசையிலுள்ள செடிகளின் குண இயல்புகளைப் போன்ற செடிகளாக நடப்படுகின்றன.

இத்திட்டத்தில் பயன்படுத்தப் படும் செடிகள் மற்றும் மரங்கள் விராலி, செனகல், கொல்லா, கொன்னை, உடை, ஆல், அரசு, அத்தி, சவுக்கு, வாகை, பனை, நாவல், கொடுக்காபுளி, தைல மரம், வேம்பு, மருது, புளி,





மயிற்கொன்றை, பூக்கொன்றை, மெல்லிஜிரா, தூங்குமூஞ்சி, சரக்கொன்னை, ஆரிகுலிபார்மிஸ், புங்கம், ஜலாந்தஸ், மலைவேம்பு, மலைபூவரசு, நெல்லி, மூங்கில், சீதா, இஸ்ரேல் உடை, வன்னி, வில்வம் ஆகியவைகளாகும்.

ஆண்டு ஒன்றுக்கு 1000 எக்டேர் பரப்பில் புதிய தாவரச் சாலைகள் அமைப்பதுடன் கடந்த ஆண்டுகளில் நிறுவிய தர்வர அரண்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் 1978-79 லிருந்து 1985 டிசம்பர் முடிய 30 கிராமங்களில் 540 கி.மீ. நீளத்திற்கு ஐந்து வரிசைத் தொகுதி தாவர அரண்கள் நட்டு 10063 எக்டேர் பரப்பு நிலம் பாதுகாக்கப்பட்டுள்ளது. தாவர அரண் அமைக்க ரூ.33.15 இலட்சமும் பராமரிப்புக்காக இதுநாள்வரை ரூ. 66.55 இலட்சமும் செலவிடப்பட்டுள்ளது. தாவர அரண்களில் உள்ள செடிகளுக்கு நீர் பாய்ச்சுதல் களை எடுத்தல், மண் கொத்திக் கொடுத்தல், மண் அணைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தண்ணீர் ஊற்ற இதுவரை இருநூற்றுக்கும் மேற்பட்ட கைபம்புடன் கூடிய குழாய்க் கிணறுகள் இம்மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளால் மறந்து கைவிடப்பட்ட தேரி நிலங்கள் இன்று பசுமையாய்க் காட்சியளிக்கின்றன. மனித நடமாட்டம் இல்லாது இருந்த நிலங்கள் இன்று மரம் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள பல ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன. வரன்முறையற்ற மேய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தேரியில் எங்கு சென்றாலும் குடிப்பதற்குத் தண்ணீர் கிடைக்கும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் சீதோஷ்ண நிலையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. தேரிநிலங்களை விளை நிலங்களாக மாற்ற அனைத்துச் சூழ்நிலைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

காற்றினால் மண் எடுத்துச் செல்லப்படுவதும் வேறொரு இடத்தில் படிதலும் தடுக்கப்பட்டுள்ளது. நிலங்கள் தாவர வளர்ச்சிக்கு ஏற்றதாக மாற்றப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் ஆதாரம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களில் குழாய்க் கிணறுகள் அமைத்து விவசாயிகள் பயிர் சாகுபடி செய்து பலனடைகிறார்கள். நிலத்தின் மதிப்பு பல இடங்களில் பத்து மடங்கு வரை உயர்ந்துள்ளது. மணல் மேடுகள் உருவாவதும் மணற் குன்றுகள் இடம் பெயர்தலும் தடுக்கப்பட்டுள்ளன. வீடுகள், சாலைகள், பொதுக் கட்டடங்கள் மணலால் மூடப்படுவது தடுத்து சாலைப் போக்குவரத்து தொடர்ந்து உறுதி செய்யப்பட்டுள்ளது. உப்பளங்களில் செம்மண் படிதலைத் தடுத்து உப்பின் தன்மை குறைவிலிருந்து காக்கப்படுகிறது. தாவரச் சாலைகளில் உள்ள மரங்களின் மகசூலை அனுபவிப்பதாலும், கூலியாட்களுக்கு வேலை வாய்ப்பு உறுதியாக்கப்பட்டுள்ளதாலும் அவர்களின் சமூக-பொருளாதார நிலை முன்னேறியுள்ளது. பயிர்கள் காற்றின் தாக்குதலிலிருந்து காக்கப்பட்டு விளைச்சல் உறுதி செய்யப்படுகிறது.

தாவர அரண்களில் உள்ள மரத்தொகுதிகளில் பறவையினங்கள் தங்குவது மனதுக்கு ரம்யமாக இருப்பதுடன் அவை தாவரங்களைத் தாக்கும் பூச்சிகளையும் அவற்றின்முட்டைகளையும் உண்பதால்தாவரங்கள் பாதுகாக்கப்படுவதுடன் அப்பறவையினங்களின் எச்சங்கள் மண்ணின் தன்மையை நன்மை பயக்கும் விதத்தில் மாற்றியமைக்கின்றன. மேலும் மரத்தொகுதிகள் அடர்ந்து இருப்பதால் காற்று மண்டலத்திலுள்ள கேடு தரும் மாசு பெரிதும் உறிஞ்சப்பட்டு சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக்கப்படுகிறது. அதுவுமல்லாமல் நூறு சதுர அடிப் பரப்பில் உள்ள மரத்தொகுதிகள் ஒலியின் உச்சத்தில் எட்டு டெசிபல்கள் குறைக்கின்றன என்று அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளபடி தாவர அரண் மரத்தொகுதிகள் ஒலியின் உச்சத்தை ( Noise Pollution ) குறைக்கவும் பெரிதும் உதவுகின்றன.

இவ்வளவு நன்மைகள் பயக்கும் இத்திட்டம் முழுவதும் இலவசமாகப் பட்டாதாரருக்கே நிறைவேற்றப்படுகிறது. தாவர அரண்களிலிருந்து கிடைக்கும் மகசூலைப் பட்டாதாரரே அனுபவித்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட காலம் வரை துறையின் பராமரிப்பிலிருந்து பின்னர் தாவர அரண்கள் பட்டாதரருக்கே ஒப்படைக்கப்படும். எந்தக் காரணத்தைக் கொண்டும் எந்த காலத்திலும், தாவர அரண்களில் உள்ள செடிகள் மற்றும் மரங்களை வெட்டக் கூடாது என்பதுதான் முக்கிய நிபந்தனை.

விவசாயிகள் தங்கள் கால் நடைகள் தாவர அரண்களை மேய்த்து அழித்துவிடாமல் பாதுகாத்து இத்திட்டம் நன்குசெயல்பட ஒத்துழைக்குமாறு வேளாண்மைத் துறையினரால் 'வேண்டப்' படுகிறார்கள்

**தமிழ் வளர்த்த பெரியார்**

# நாடகமும் சம்பந்தனாரும்

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம் தமிழ் நாடகத்துக்கு ஏற்றம் உண்டாக்கிய ஆண்டின் ஆரம்பமாகும். ஆம்; ராவ்பகதூர் பம்மல் சம்பந்த முதலியார் தமிழ்நாடக அரங்கில் அடியெடுத்து வைத்தபோதுதான் மறுமலர்ச்சி ஏற்பட்டது.

இடைக்காலத்தில் பாழ்பட்டுப்போன தமிழ் நாடக உலகை உயர்த்துவதற்காகவே சம்பந்த முதலியார் தமிழகத்தில் தோன்றினார் என்று சொல்ல வேண்டும்.

தமிழ் நாடக வானத்தில் சம்பந்த முதலியாரின் உருவத்தில் விடிவெள்ளியொன்று உதித்தது!

வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கிய சம்பந்தருக்கு நாடகக்கலை மீது நாட்டம் பதிந்தது, தமிழ் நாடகக் கலைஞர்கள் பெற்ற பெரும் பேறாகும்.

இளமையில் சம்பந்தர் பார்த்த தமிழ் நாடகங்களில் கலையுணர்வில்லாத விபரீதப் போக்கு இவருக்கு வெறுப்பையே தந்தது. இவர் தம் தந்தையுடன் போய்ப் பார்த்த ஆங்கில நாடகங்களின் சிறப்பு, அவற்றைப் போல் தமிழ் நாடகங்களை ஆக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தையுண்டாக்கியது இவருக்கு.

இதனிடையே, சென்னை விக்டோரியா மண்டபத்தில் பெல்லாரி கிருஷ்ணமாச்சார்லு என்ற பிரபல ஆந்திர நடிகர் சரசவினோதினிசபை என்ற நாடகக் குழுவுடன் 'சிரகாரி' முதலிய தெலுங்கு நாடகங்களை அரங்கேற்றி நடத்தியது, சம்பந்தரின் கவனத்தைக் கவர்ந்தது. தாமும் இதைப்போல நாடக சபையொன்றை அமைத்து நாடகங்களையெழுதி நடிக்க வேண்டுமென்ற ஆர்வம் சம்பந்தருக்கு உண்டாயிற்று.

பட்டப் படிப்புப் படித்துக் கொண்டிருந்த 18வது வயதிலேயே சம்பந்தர் தம்மையொத்த இளைஞர்கள் சிலரைக் கூட்டாளியாக்கிக் கொண்டு 1891 ஆம் ஆண்டில் சுகுணவிலாசசபை என்ற அமெச்சூர் நாடகசபையொன்றை ஏற்படுத்தினார்.

அச்சபையின் சார்பில் தாமும் தம் நண்பர்களும் நடிப்பதற்காக மோனியர் வில்லியம்ஸ் என்பார் ஆங்கிலமாக்கியிருந்த காளிதாசனின் 'சகுந்தலை' நாடகத்தைத் தமிழாக்கினார்.

விக்டோரியா மண்டபத்திலேயே தம் சுகுணவிலாச சபைக்கு இடம் ஏற்படுத்திக் கொண்டு, சம்பந்தர் நண்பர்களுடன் ஒன்றன்பின்னொன்றாக நாடகங்களை நடத்தி விரைவில் கலைஞர்களும் புகழும்படியாகச் சிறந்த நாடக ஆசிரியராகவும் திறமைமிக்க நடிகராகவும் நடிப்பவர்களுக்குப் பயிற்சியளிக்கும் இயக்குநராகவும் முன்னேற்றம் அடைந்தார்.



பம்மல் சம்பந்தனாரும் தமிழ்த் தென்றல் திரு. வி. க. வும்

தொடக்கத்தில் சம்பந்தர், காளிதாசன் நாடகங்களையும், ஷேக்ஸ்பியர் நாடகங்களையும் தன் நண்பர்களுடன் நடிக்கலானார். பின்பு காலப்போக்கில் இவர் தாமே சொந்தமாகக் கற்பனை செய்து நாடகங்களை எழுதி நடித்துப் பேர் பெறலானார்.

இவ்விதமாகத் தமிழ் நாடக உலகில் சம்பந்தர் அடைந்த நாடக வளர்ச்சிக்கு இவருடன் இளமையிலிருந்தே ஒன்றாகப் படித்து நண்பராக இருந்த வி.வி. சீநிவாச ஐயங்கார் உறுதுணையாயிருந்தார். இவர் புகழ்பெற்ற வழக்கறிஞர் என்பதை முதியவர்கள் அறிவர். இவரும் சம்பந்தரும் நீதிபதிகளாகவும் சிலகாலம் இருந்தனர்.

சீநிவாச ஐயங்காரும் ஆங்கிலத்தில் ஓரங்க நாடகங்கள் பல எழுதி அரங்கேற்றியிருக்கிறார்.

சம்பந்தர் ஊக்குவித்த ஊக்கத்தால் சீநிவாச ஐயங்காரின் மருமகன் வி. சி. கோபாலரத்தினமும் அவர் மருமகன் டாக்டர் வி. இராமமூர்த்தியும் சுகுணவிலாச சபையின் முக்கிய நடிகர்களாக விளங்கினர்.

மெத்தப் படித்துப் பெரும் பதவிகள் பல வகித்துப் பலரால் மதிக்கப்பட்டுவந்த சம்பந்தர் உயரிய ஒரு குறிக்கோளுடன் தமிழ் நாடக உலகில் புகுந்த நாடகாசிரியராகவும் நடிகராகவும் பெரும்பங்கு கொண்டு தமிழ் நாடகக் கலைக்கு எழிலும் ஏற்றமும் தந்த பின்னர்தான், நீதிமன்றங்களிலும் அரசாங்க அலுவலகங்களிலும், தபால்-தந்தி இலாகா, ரயில்வே முதலிய பல துறைகளிலும் உயர் பதவிகள் வகித்து வந்த பிரமுகர் பலர் நாடகங்களில் ஈடுபடலாயினர்.


கவர்ன்மெண்ட் அபிஷியல் பார்ட்டி, செக்ரடேரியட் பார்ட்டி போன்ற அமெச்சூர் நாடக சபைகள் பல, தலைநகரிலும் மாவட்டங்களிலும் அடுத்தடுத்து ஏற்படலாயின.

சம்பந்தரின் சுகுணவிலாச சபையும், எப்.ஜி.நடேச ஐயரின் ரசிகரஞ்சனிசபை போன்றவையும் தத்தம் குழுவினருடன் தலைநகரில் மட்டுமல்லாமல் தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் நாடகங்களை நடித்து, மக்களின் கவனத்தைக் கவர்ந்த பின்னர்தான் தமிழ் நாடகக் கலைக்கே பெருமையும் மதிப்பும் ஏற்பட்டது.

இப்புரட்சிகரமான மாறுதல்தான் தொழில்துறை நாடக

**நாரண. துரைக்கண்ணன்**

சபைகளின் நடைமுறையிலும் நடிகர்களின் போக்கிலும் ஒரு நல்ல மாற்றத்தையுண்டுபண்ணியது. தத்தம் வசதிவாய்ப்புக்கும் மனப்போக்குக்கும் தகுந்தவாறு நாடகங்களை நடத்திக் கொண்டிருந்த தொழில்முறை நாடகக் குழுவினர் ஒரு வரையறைக்கும் ஒழுங்குமுறைக்கும் உட்பட்டு நாடகங்களை நடத்த முற்பட்டது சம்பந்தர் ஏற்படுத்திய புத்துணர்ச்சியாலும் மாறுதலாலும் தான் என்றால் அது மிகையாகாது.



சம்பந்தர் நாடக மேடையில் நல்ல நாடகங்களை ஒழுங்காக நடத்திப் பீடுநடை போடத் தொடங்கிய பின்னர்தான், நாடக நடிகர் என்போருக்கு அவர்கள் பயில்முறை (அமெச்சூர் நடிகர்), தொழில்முறை நடிகர் என்று யாராக இருந்தாலும்-நன்மதிப்பும் பெருமையும் உண்டாயிற்று. நாடக நடிகர்களைக் கூத்தாடிகள் என்று இழிவாகக் கூறுவதைவிட்டுக் கலைஞர்கள் என மக்கள் மரியாதையாக அழைக்கலாயினர்; நல்ல மதிப்பை வழங்கினர்.

புராண, இதிகாச, காவியங்கள், நாடோடிக் கதைகளையே நாடகங்களாக மனம்போன போக்கில் நடத்திக் கொண்டிருந்த தொழில்முறை நடிகர்கள் சம்பந்தர் எழுதி நடித்துவந்த மனோகரா, சபாபதி, லீலாவதி சுலோசனா, மாக்பெத், ஹாம்லெட் போன்ற நாடகங்களை நடித்துப் புகழும் பொருளும் பெறலாயினர்.

ஆகவே, சமுதாயத்தில் கூத்தாடிகள் என்று இழித்துக் கூறி வந்த தங்களைக் கலைஞர்கள் என உயர்வாகச் சொல்லும்படியாக வைத்த சம்பந்தரைத் தொழில்முறை நடிகர்கள் அனைவருமே என்றென்றும் நன்றியுடன் நினைந்து போற்றக் கடமைப்பட்டவர்களாவர்.

நம்மிடையே 92 ஆண்டுகள் சிறப்பாக வாழ்ந்த சம்பந்தர் 90 நாடகங்களுக்கு மேல் எழுதியிருக்கிறார். அவை ஒவ்வொன்றும் சுகுணவிலாசசபை நாடகமேடையில் அரங்கேறிய பின்னர்தான் வெளிக் கொட்டகைகளில் நடைபெற்றுவந்தன.

சம்பந்தர் தம் நாடகங்களில் ஏதாயினும் ஒரு பாத்திரம் ஏற்று நடித்திருக்கிறார். தாம் கதாநாயகனாத்தான் - முக்கியப் பாத்திரங்களில்தான் - வேடந்தாங்கி நடிக்கவேண்டும் என்று இவர் எண்ணியதில்லை. தடிதூக்கி வரும் சேவகன் போன்ற சிறுசிறு வேடங்களிலும் இவர் தோன்றி நடித்து மக்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறார்.

மிகப் பிரசித்தி பெற்ற மனோகரா நாடகத்தில் மனோகராகப் பலமுறை நடித்த சம்பந்தர் பின்னே தந்தை புருடோத்தமனாகவும் வேடம் பூண்டு நடித்திருக்கிறார்.

சம்பந்தருடைய நாடகங்கள் 5500 இடங்களில் நடந்திருக்கின்றன. அவற்றில் இவர் மட்டும் 500க்கும் அதிகமான நாடகங்களில் நடித்திருக்கிறார்.

சம்பந்தரின் நாடகங்களில் மனோகரா, சபாபதி, வேதாள உலகம், லீலாவதி சுலோசனா, தாசிப்பெண், ஊர்வசியின் சாபம், காலவரிஷி, யயாதி, இரத்தினாவளி போன்றவை திரைப்படங்களாகவும் வந்திருக்கின்றன. இவர் மனோகரா படத்தில் புருடோத்தமனாகவும் நடித்துச் சிறப்பித்திருக்கிறார்.

'சதி சுலோசனா' நாடகம் திரைப் படமாக்கப்பட்டபோது சம்பந்தரே இயக்குநராகவும் இருந்து வெற்றிகரமாகத் தயாரித்திருக்கிறார்.

இதுவன்றி, இவருடைய காலவரிஷி, இரத்தினாவளி, வேதாள உலகம், சதி சுலோசனா, சந்திரஹரி, சபாபதி, பொங்கல் பண்டிகை, இராமலிங்க சுவாமிகள் நாடகங்களும் படங்களாக வெளிவந்திருக்கின்றன.

சம்பந்தனார் எழுதியுள்ள நாடகங்கள் பலவும் சிறந்தவையாக இருந்தாலும், மனோகரா நாடகம்தான் கற்பனைத்திறன், நாடக அமைப்பு, நடிப்புத்திறமையை வெளிப்படுத்துவதற்கான உணர்ச்சிமிக்க கட்டங்கள், வசனச் சிறப்பு முதலியவைகளால் தலைசிறந்து விளங்குகிறது.

மனோகரன் பாத்திரத்தை ஏற்று நடிக்க ஆசைப்படாத நடிகர்களே கிடையாது. சுகுண விலாச சபையில் சி.பி. இராமசாமி ஐயர், ஆர்.கே.சண்முகம் செட்டியார், எஸ்.சத்தியமூர்த்தி போன்ற அரசியல் தலைவர்களெல்லாம்கூட மனோகரன் வேடம் பூண்டு நடித்திருக்கின்றனர்.

சதாவதானம் கிருஷ்ணசாமிப் பாவலர், மு.கந்தசாமிமுதலியார், வி. சி. கோபாலரத்தினம், டாக்டர் வி.இராமமூர்த்தி போன்றாருக்கெல்லாம் சம்பந்தர் மனோகரனாக நடித்துப் பெயர் பெற வாய்ப்புத் தந்து உற்சாகப் படுத்தியிருக்கிறார்.

இவ்விதம் சம்பந்தர் தந்த ஊக்கந்தான் பாவலர், கந்தசாமி முதலியார், கோபாலரத்தினம் போன்றாரை நடிப்புப் பயிற்சி தரத்தக்க ஆசிரியர்களாகவும் நாடகங்களை எழுதும் ஆற்றல் வாய்ந்த ஆசிரியர்களாகவும் வளர்த்திருக்கிறது.

பாவலர், கந்தசாமி, கோபால ரத்தினம், இராமமூர்த்தி, யாழ்ப்பாணம் கலையரசு சொர்ணலிங்கம் போன்ற மாணாக்கர்களும் இவர் இயற்றித் தந்து நடிக்கப்பட்ட நாடகங்களும் தாம் சம்பந்த முதலியாரவர்களுக்கு நிரந்தர நினைவுச் சின்னங்களாக விளங்கி வருகின்றன. ●

# வளர்ச்சிப் பாதையில் கொடைக்கானல்

கே. ஞானதேசிகன், இ.ஆ.ப.,
உதவி ஆட்சியாளர்,
கொடைக்கானல்.

கோடைக்கானல் வட்டம் 14.9.85 வரையில் பெரியகுளம் கோட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தது.

கொடைக்கானல் வட்டத்தின் இயற்கைச் சூழ்நிலையின் காரணமாக, அதிகாரிகள் கொண்ட வட்டத்தின் இன்றியமையாத வளர்ச்சித் திட்டங்களின் பிரச்சினைகளைப் பெரியகுளம் அல்லது மதுரையைத் தலைமையிடங்களாகக் கொண்டு அதன் வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்துவது என்பது இயலாத காரியமாக இருந்து வந்தது. மலையைச் சார்ந்த பகுதிகளில் உள்ள வனங்களைப் பாதுகாத்தலும், பல கிராமங்களுக்குச் சாலை வசதிகளை அமைத்தலும், கொடைக்கானல் நகரியத்தின் இயற்கைச் சூழலுக்கு ஏற்றதாக இல்லாது கட்டப்பட்ட கட்டடங்களையும் சாலைப் போக்குவரத்திற்கு இடையூறாகவும், மலைப் பகுதியின் அழகினைக் கெடுப்பதாகவும் உள்ள அனுமதியில்லாத ஆக்கிரமிப்புகளையும் ஒழுங்குபடுத்தலும் இந்த மலை வாழுமிடத்தின் சில இன்றியமையாத பிரச்சினைகள் ஆகும்.

மேலும், இலங்கை அகதிகள் வருகையாலும், கோடை காலத்தில் வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையாலும் அதிகரித்துள்ள மக்கள் தொகைக்கு ஏற்பக் கொடை நகரியத்தினால் குடி தண்ணீரைச் சரிவர வழங்க இயலவில்லை. பெரும்பாலான வனப் பகுதிகள் ஒதுக்கப்பட்ட காடுகளாக இருப்பதால், விறகுகளின் பற்றாக்குறையின் காரணமாகத் தேவைகளை அளிக்க முடியாமல் இருப்பது எரிபொருள் விலைகள் அதிகரிக்கக் காரணமாகும், கொடை ஏரியில் எவ்விதமாசுகளும் இல்லாமல் பாதுகாப்பது மற்றொரு பெரிய பிரச்சினையாகும்.

மேலே கண்ட பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கும், பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதற்கு அரசு கொடை வட்டத்தின் நிலையை தாலுகாவிலிருந்து ஓர் கோட்டமாக அமைத்து அதற்கு ஓர் இந்திய ஆட்சிப் பணித்துறை அலுவலரை நியமித்துள்ளது. இப்பகுதியை மேம்படுத்துவதற்கான பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**மேம்பாட்டுத் திட்டம், மஞ்சளாறு நீர் கோப்புத் திட்டம்**

கீழ்க்கண்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மண் வளத்தைப் பாதுகாப்பதற்காகக் கற்கோட்டைச் சுவர்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பொறியாளர் இவ்வேலைகளை மேற்கொண்டுள்ளது.

**தோட்டக்கலை வளர்ச்சி**

தோட்டக்கலைத் துறையானது முக்கிய பயிர்களைச் சாகுபடி செய்வதற்கு நாற்றங்கால் ஏற்படுத்தி ஆரஞ்ச், காபி, வாசனைப் பொருட்கள் மற்றும் சிரோனியம் ஆகியவற்றைப் பயிர் செய்ய விவசாயிகளை ஊக்குவிக்கிறது.

**கொடைமலைப் பகுதியை விரிவாக்குதல்**

தேசிய நெடுஞ்சாலைத் துறை இப்பணிகளை மேற்கொண்டுள்ளது. பெருமாள்மலை மற்றும் பேரிஜம் பகுதிகளில் சின்கோனாத் துறையினால் சிரோனியம் பயிரிடப்படுகிறது.

உணவு விடுதிகள், உடை மாற்றும் அறைகள் மற்றும் வெள்ளி நீர்வீழ்ச்சியில் கைப்பிடித் தண்டவாளங்கள் ஏற்படுத்துதல்.

சுற்றுலா மையத்துறை இப்பணிகளை மேற்கொண்டுள்ளது.

**கால்நடை பராமரிப்பு**

பூலத்தூர் மற்றும் பண்ணைக்காடு ஆகிய ஊர்களில் கால்நடை மருந்தகங்கள் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நடமாடும் கால்நடை மருந்தகம் ஏற்கெனவே வாங்கப்பட்டுவிட்டது.

**புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்துதல்.**

ஓர் புதிய பேருந்து நிலையம் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணம் செய்யத் தீர்மானிக்கப்பட்டு, தற்போது உள்ள பேருந்து நிலையம் சிற்றுண்டி நிலையமாகவும், அங்காடிகளாகவும் மாற்றம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூபாய் 80 இலட்சம் செலவாகும். இது ஒருங்கிணைந்த நகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும்.



கொடை நகரியத்திற்குக் குடி தண்ணீர் விநியோகிக்கப்படும் தற்போதைய நீர்த் தேக்கத்திற்குப் பக்கம் மற்றொரு புதிய குடிநீர் விநியோக நீர்த்தேக்கம் சுமார் ரூ. 30 இலட்சம் செலவில் கட்டுவதற்குத் திட்டம் தீட்டப்பட்டு அரசு ஒப்புதலளிக்கப் பெற்றுப் பணிகள் நடந்து வருகின்றன.

**சாலை ஓரத்தில் உள்ள ஆட்சேபகரமான ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்**

சாலை ஓரத்தில் இருக்கும் கடைகள் மற்றும் பெட்டிக் கடைகள் ஆக்கிரமித்துள்ள-அனுமதி பெறா இடங்கள் சுமார் 340. ஆக்கிரமிப்புகள், முழுவதுமோ அல்லது ஒரு சில பகுதிகளோ அகற்றப்பட்டுவிட்டன. அவற்றில் 45 கடைகளுக்கு மாற்று இடங்கள் நெருக்கமற்ற இடங்களில் அளிக்கப்பட்டுள்ளன.







கொடை நகரியத்திற்கு தீர்மானிக்கப்பட்ட நில உபயோகத்திற்குப் பெருந்திட்டம் (Master Plan) வகுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் உபயோகத்திற்குத் தற்போதுள்ள இட வசதி போதுமானதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், எதிர்கால திட்டத்தை முன்னிட்டு குடியிருப்பு, வணிகப் பகுதிகள் போதுமான அளவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிதாகமலர்ந்துள்ள அண்ணா மாவட்டத்தின் புதிய கோட்டமான கொடைக்கானல், வளர்ச்சிப் பாதையில் தற்போது முன்னேற்றமடைந்து வருகிறது. கோடையில் வருகை தரவிருக்கும் சுற்றுலாப் பயணிகள் இவ்வாண்டு சற்றே வேறுபாடான, வசதிகளைத் தரும் கொடைக்கானல் காட்சியைக் காணுவர்.

## மதுரை மாவட்டத்தில்...

**வை**கை அணையில் சிறிய நீர் மின் திட்டம் புதிதாகச் சுமார் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 6 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். இத்திட்டம் ஐந்தாண்டுகளில் நிறைவேற்றப்படும்.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டத்தில் உத்தமபாளையம், ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் பேருந்து நிலையம் மற்றும் கடைகள் கட்டுவதற்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

உத்தமபாளையம் பேரூராட்சியில் இத்திட்டப் பணிகளுக்காக ரூ. 20 இலட்சம், அரசு அனுமதித்துள்ளது. ஆண்டிபட்டி, உசிலம்பட்டி ஆகிய பேரூராட்சிகளில் ரூபாய் 80 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மதுரை மாவட்டத்தில் நாட்டார்மங்கலம், செக்காணூரணி கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சிப் பிரிவு ஆரம்பிக்க அரசு அனுமதித்துள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் தலா 25 மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

மொத்த இடங்களில் 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கும் மலைச் சாதியினருக்கும், 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.


(மாவட்ட ஆட்சித்தலைவர் திரு இரா. வரதராஜுலு, இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்த தகவல்களிலிருந்து)



# சென்னை நகரில் குடியரசு நாள் விழா 26-1-1986

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர், மற்றும் தலைமைச் செயலர் திரு டி. வி. அந்தோணி, இ.ஆ.ப., ஆகியோருடன், தீரச் செயல் புரிந்தமைக்காக குடியரசுத் திருநாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அண்ணா வீரப் பதக்கம் பெற்ற பெருமக்கள்.







# ஊரக வளர்ச்சித் துறையின் ஒப்பற்ற பணிகள்

**வி.சுந்தரம், இ.ஆ.ப.,**
**செயலர், ஆணையர்,**
**ஊரக வளர்ச்சித் துறை.**

கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதார வல்லுநர்களின் கருத்து மட்டுமல்ல. காலம் காட்டும் உண்மையும் கூட. எனவே ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் கிராமங்களின் வளத்திலும் வாழ்விலும் அடங்கி உள்ளது எனக் குறிப்பிடும்போது நமது தமிழ்நாட்டின் கிராமங்கள் எத்தகைய வளர்ச்சியைப் பெற்றுள்ளன என்பதை அனைவரும் அறிந்து கொள்ள விழைவது இயற்கையே.

நமது கிராமங்களின் வளர்ச்சியை எவ்வாறு கணக்கிடுவது? உற்று நோக்குதலும் ஒப்பு நோக்குதலும் இலக்கியத் திறனாய்வின் இரு கண்கள் என்பர். இலக்கியத்தின் வளர்ச்சியைக் கண்டறியக் கூறப்பட்ட இக்கூற்று, கிராமங்களின் வளர்ச்சியைக் கணக்கிடுவதிலும் பொருந்தும். நமது கிராமங்களின் முந்தைய நிலையையும் இன்றைய நிலைமையையும் உற்று நோக்கி ஒப்பிட்டுப் பார்த்தால், 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழக கிராமங்கள் பெற்றுள்ள பெரும் வளர்ச்சி தெள்ளத்தெரியும்.

வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் வறுமைக் கோட்டின் பிடியிலிருந்து விடுபட்டு வளமைக்கோட்டையை அடைய வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர், நமது அன்புக்குரிய முதலமைச்சர் டாக்டர் **எம்.ஜி.ஆர். அவர்கள்** பதவி ஏற்று, ஏறத்தாழப் பத்தாண்டுக் காலத்திற்குள் கிராமப்புற முன்னேற்றத்திற்கெனப் **மாண்புமிகு முதலமைச்சர்** ஆற்றியுள்ள பணிகள் இதுவரை எந்த ஆட்சியும் ஆற்றி இராதவை.

கிராமங்களின் நல்வாழ்விற்கென. **மாண்புமிகு முதலமைச்சர்** அறிமுகப்படுத்திய திட்டங்களுள் முதலில் குறிப்பிடத்தக்கது 'தன்னிறைவுத் திட்டம்'. நமது கிராமப்புறங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் அவைகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல்படியாக அமையும் என்ற சீரிய எதிர்நோக்குச் சிந்தனையோடு மாண்புமிகு முதல்வர் அறிவித்த இந்தத் திட்டம் **''இந்தியாவிலேயே இது போன்ற திட்டம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை''** என்ற தனிச் சிறப்பைக் கொண்டது. இந்தியா விடுதலை பெற்று எத்தனையோ ஆண்டுகள் கழிந்தபின்பும் அடிப்படை வசதி இன்றித் தவித்த கிராமங்களுக்கு, மிகக் குறுகிய காலத்தில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்த பெருமையின் காரணமாகத் **தன்னிறைவுத் திட்டம் தன்னிகரற்ற திட்டம்** என மக்களின் வரவேற்பையும், பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.



குடிநீர் வசதி, சிறு பாலங்கள், பள்ளிக் கட்டடங்கள், ஊரக மருந்தகங்கள், இணைப்புச் சாலை வசதிகள், தாய் சேய் நல விடுதிகள், மயானங்களுக்குப் பாதை வசதி போன்ற பல்வேறு அடிப்படைத் தேவைகளைத் தன்னிறைவுத் திட்டம் தீர்த்து வைத்துள்ளது. ஏறத்தாழ முப்பதாண்டுக் காலத்திற்கு மேலாகத் தீர்க்கப்படாத பிரச்சனைகள் தன்னிறைவுத் திட்டம் மூலம் மூன்றே ஆண்டுகளில் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

*1980-81*ஆம் ஆண்டு *69* ஒன்றியங்களிலும், *1981-82*ஆம் ஆண்டு *150* ஒன்றியங்களிலும், *1982-83*ஆம் ஆண்டு *159* ஒன்றியங்களிலும், மூன்றே ஆண்டுகளில் மொத்தம்

215 கோடி ரூபாய் செலவில் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் பல்வேறு அம்சங்களுள் ஓர் அம்சமாகிய ''ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் மயானத்திற்கும் பாதை அமைத்தல்'' என்ற ஓர் அம்சத்தைப் பற்றிய சோகப் பின்னணியை இங்கே சொல்லியாகவேண்டும்.




பெரும்பாலான ஆதிதிராவிடர் குடியிருப்புகள் வயல்வெளியின் அருகிலேயே அமைந்துள்ளன. மயானமோ வயல்களைத் தாண்டி அமைந்திருந்தது. ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்குச் செல்ல



வயல் நடுவே செல்லும் வரப்புதான் ஒரே பாதை. வயல்களில் பயிர் வளராத காலங்களில் பிணங்களைச் சுமந்து செல்வதில் ஆதிதிராவிடர்களுக்குப் பிரச்சினை இருந்ததில்லை. ஆனால் பயிர் வளர்ந்துவிட்டால்? பிணத்தைச் சுமந்துகொண்டு ஒற்றையடிப் பாதையாம் வரப்பு வழியே நால்வர் செல்ல முடியாது. மீறிச் சென்றால் பயிர்களை மிதித்துச் சென்று நிலச் சொந்தக்காரர்களின் வெறுப்பையும் கோபத்தையும் சம்பாதிக்க நேரிடும். எனவே பயிர் வளர்ந்து நிற்கும் காலங்களில், பிணத்தைத் தோளில்தான் தூக்கிச் சென்று புதைக்க வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தனர், ஆதிதிராவிடர் மக்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழும் ஆதிதிராவிடர் மக்களின் இந்த அவல நிலையைக் கண்டு முதலில் களைந்தது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்த அரசு! மயானங்களுக்குப் பாதை அமைக்கும் திட்டத்தையும் தன்னிறைவுத் திட்டத்தில் ஓர் அம்சமாக இணைத்து ஆதிதிராவிடர் மக்களின் இந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டது.

அடிப்படை வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கும் தன்னிறைவுத் திட்டத்தை கிராமப்புறங்களில் நிறைவேற்றியதோடு இந்த அரசு திருப்தி அடைந்துவிடவில்லை. கிராம மக்கள் பெற்றுள்ள இதே நன்மைகளைப் பேரூராட்சிகளும் - ஏன் நகராட்சிகளும் பெற வேண்டும் என்பதற்காகத் தன்னிறைவுத் திட்டத்தைப் பேரூராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தி அரசு ஆணை இட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டில் 146 பேரூராட்சிகளிலும், 1983-84ஆம் ஆண்டில் 200 பேரூராட்சிகளிலும், 1984-85ஆம் ஆண்டில் எஞ்சிய பேரூராட்சிகளிலும் தன்னிறைவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

கிராமங்களின் வளர்ச்சிக்கென ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஆண்டுதோறும் இந்த அரசு அதிகரித்துள்ளது. 1976-77ஆம் ஆண்டு கிராம



சமுதாய வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்ட தொகை ஓர் ஒன்றியத்திற்கு 31 இலட்சம் மட்டுமே. இத்தொகையை 1980-81ஆம் ஆண்டிலேயே ஏறத்தாழ இரு மடங்காக உயர்த்தி அளித்துள்ளது இன்றைய தமிழ்நாடு அரசு.


குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்த அரசு காட்டியுள்ள ஆர்வமும் அக்கறையும் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டியவை. ''நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை. குடிக்கத் தண்ணீர்-நல்ல தண்ணீர்தான் கேட்டார்கள். எனவே குடிநீர்ப் பிரச்சினையை முற்றிலும் தீர்ப்பதுதான் இந்த அரசின் முதல் இலட்சியம்.'' என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்ற முதல்நாள் குறிப்பிட்டார்கள்.

குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் இந்த அரசு அதிக அக்கறையும் ஆர்வமும் கொண்டு முனைப்புடன் செயலாற்றி வருகிறது. 31 3.1976 முடிய மொத்தம் 79460 குடிநீர்க் கிணறுகளும், 6796 மேல்நிலை தானியங்கித் தொட்டிகளும் மட்டுமே தமிழகக்கிராமங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வாயில்களாக அமைந்திருந்தன. இவைகளால் குடிநீர்ப் பிரச்சினையைத் தொட முடியுமே தவிர, தீர்க்க முடியாது என்பதை உணர்ந்த தமிழ்நாடு அரசு, முதற்கண் தன்னிறைவுத்திட்டத்தின், முதல் அம்சமாகக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுத்தது. 1982-83ஆம் ஆண்டிலேயே தன்னிறைவுத்திட்டம் நிறைவு பெற்றுவிட்டது என்றாலும் கூட குடிநீர் வழங்கும் அம்சம் மட்டும் 1982-83ஆம் ஆண்டிற்குப் பின்பும், தொடரப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத் திட்டத்தில் இதற்கெனக் கணிசமான நிதியை அரசு ஒதுக்கீடு செய்தது.

தொடர்ந்து ஏற்பட்ட வறட்சிநிலையின் காரணமாக மாநிலத்தில் சில இடங்களில் குடிநீர்ப் பிரச்சினையற்ற குடியிருப்புகளாக முதலில் வகைப்படுத்தப்பட்ட குடியிருப்புகள் பிரச்சினைக் குடியிருப்புகளாக வகை மாற்றம் செய்யப்பட்டன. இப்படி வகை மாற்றம் செய்யப்பட்ட குடியிருப்புகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அரசு குடிநீர் வழங்கியது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.89.84 கோடி செலவில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப் பெற்றன.

இத்துடன் ரூ. 24.7 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணியின் கீழ் 21,992 ஆழ் துளைக் கிணறுகள் தோண்டப் பெற்றன. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 7,226 பிரச்சினை (மக்கள் தொகை) கிராமங்களுக்கு (ஒரு சில பகுதியளவில்) ரூ. 108.19 கோடி செலவில் குடிநீர் வழங்கப் பெற்றது. ஒரே வரியில் சொல்வதானால், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 7,226 பிரச்சினை கிராமங்களுக்குக் குறைந்த அளவு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ஆதாரமாவது வழங்கப்பட்டுள்ளது. கிராமம் முழுமைக்குமான குடிநீர்த் தேவையை ஒரு குடிநீர் ஆதாரம் மட்டும் பூர்த்தி செய்துவிடும் என்று எதிர்பார்க்கமுடியாது என்பதால், இது போதுமானதல்ல என்று அரசு கருதுகிறது.

எனவே, அரசு, தேவையான நடவடிக்கைகளை எப்போதும் எடுத்து வந்தது போல் 1985-86ஆம் ஆண்டிலும் சராசரியாக 250-300 மக்கள்தொகைகொண்ட ஒவ்வொரு குடியிருப்புக்கும் ஒரு கையிறைப்பான் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மக்கள் தொகை 750க்கு மேற்கொண்ட குடியிருப்புகள் அல்லது குடிநீருக்கான சுய ஆதாரத்தின் மூலம் குடிநீர் வழங்க இயலாத இடங்களில் விசைஇறைப்பானுடன் கூடிய மேல்நிலைத்தொட்டி கட்டும் திட்டம் தொடரப்படும். தொடர்ந்து ஏற்பட்ட வறட்சி நிலை காரணமாக நிலத்தடி







நீர் மட்டம் தாழ்ந்த போனபடியால் குடிநீர்ப் பிரச்சினையற்ற குடியிருப்புகளில் பல பிரச்சினைக் குடியிருப்பாக வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இவைகளுக்குக் குடிநீர் வழங்குவது தொடரப்படும். 1985-86ஆம் ஆண்டில் அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ்,ரூ.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஊரக குடிநீர் விரைவுத் திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ரூ.. 18 கோடி மத்திய அரசு வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஊரகக் குடிநீர்த் திட்டத்தை நன்முறையில செயலாக்கியதற்கு ஊக்கத்தொகையும் இவ்வரசுக்குக் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகிறது. 1985-86ல் இருபத்து ஐந்து லட்சம் மக்கள் பயனடையும் வகையில் 2,000 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப்பெறும்.

குடிநீர்ப் பிரச்சினையுள்ள பகுதிகளை இனம் கண்டுகொள்ளவும் தற்போதுள்ள குடிநீர் மூலங்கள் போதுமானவையா என்பதைக் கண்டறியவும் எல்லாக் குடியிருப்புகளையும் உடனடியாக மறு கணக்கெடுப்புச் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. போதுமான குடிநீர் உள்ளவிடங்களில் மக்கள் தொகைக்கேற்ப குழாய் மூலம் குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மறு கணக்கெடுப்பின் முடிவிற்கேற்ப பிரச்சினைக் குடியிருப்புகளுக்குப் படிப்படியாக அடிப்படைத் தேவைத் திட்டத்தின் கீழ், குடிநீர் வசதி செய்து தரப்படும்.

தன்னிறைவுத் திட்டம், குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்க்கும் திட்டம் ஆகியவை சமுதாயத்தின் பொதுப்படையான தேவைகளைத் தீர்த்து வைக்க அதனைத் தொடர்ந்து சமுதாயத்தின் அங்கமாகிய சிறு, குறு விவசாயிகள் நிலமற்ற வேளாண்மைத் தொழில்கள் மற்றும் ஊரகக் கைவினைஞர்கள் ஆகியோரின் வாழ்வு வளம் பெறவும் இந்த அரசு தளராது பாடுபட்டு வருகிறது. சிறு மற்றும் குறு விவசாயிகளின் நன்மைக்கென சிறு, குறு விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் பெரும் திட்டம் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன. 1983 சூலைத் திங்கள் முதல், தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூ. 5 லட்சம் அளிக்கப்படுகிறது. இத்தொகையில் இருந்து சிறுபாசனக் கிணறுகள் தோண்டவும் ,நீர் ஏற்று இயந்திரங்கள் நிறுவவும் , நிலத்தை வளப்படுத்தவும் எரி பொருளாகப் பயன்படும் மரங்கள்மட்டுமின்றி பழம்தந்து பணம் தரும் மரங்களை நடவும், வளர்க்கவும் சிறு மற்றும் குறுவிவசாயிகளுக்கு உதவி வழங்கப்படுகிறது. இதோடு உரம் மற்றும் விதைகள், எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகைகள் வாங்கவும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குத் தக்க உதவிகள் அளிக்கப்படுகின்றன.

இந்த சிறு, குறு விவசாயிகளுக்கு உதவி அளிக்கும் பெரும் திட்டத்தின் கீழ்,1983-84ஆம் ஆண்டில் ரூ. 1468.52 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு,அதில் ரூ. 972.38 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 1889.98 லட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு. இதில் ரூ. 1431.46 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், சிறுபாசன வசதியின் கீழ், ரூ. 1983-84ஆம் ஆண்டில்





27061 சிறு, குறு விவசாயிகளும், 1984-85ஆம் ஆண்டில் 48551 சிறு, குறு விவசாயிகளும் பயன் பெற்றுள்ளனர். இதன் விளைவாக 1983-84ஆம் ஆண்டில் 30238 எக்டேர் நிலப் பரப்பும், 1984-85ஆம் ஆண்டில் 56205 எக்டேர் நிலப்பரப்பும் பாசன வசதி பெற்றுள்ளன.

''தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றார் மகாகவி பாரதியார். அவர் பாடிச் சென்ற இந்தத் தனி மனிதன் தனிக் குடும்ப மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு, தனி மனித-தனிக் குடும்பத்தின் பொருளாதார நிலையை வளப்படுத்தும் இலட்சியத்தைக் கொண்டதுதான் 'ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்'. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வில் வளமையைத் தோற்றுவிப்பது இந்தத் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் கீழ், ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதாவது 1985 மார்ச் திங்கள் முடிய 11,30,100 குடும்பங்களுக்கு உதவி அளிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கை மிஞ்சி மொத்தம் 13,96,015குடும்பங்களுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 4,62,828 குடும்பங்கள் ஆதிதிராவிடர் மற்றும் மலை ஜாதி வகுப்பினைச் சார்ந்தவர்கள் என்ற செய்தி சமுதாயத்தில் அடித்தள மக்கள் வளம் பெறுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அக்கறையும் ஆர்வமும் தெளிவாகப் புரிகின்றதன்றோ?




''கிராமப்புற இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்'' (TRY SEM) 18 முதல் 35 வயது வரையிலான கிராமப்புற இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்கும் எண்ணற்ற கிராமப்புறத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட்டு, தங்களுக்குத் தாங்களே வேலைவாய்ப்பைத் தேடிக்கொள்ள வழி வகுக்கும் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,66,102 இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியின் அடிப்படையில் 94,921 பேர்கள் தக்க வேலை வாய்ப்பைத் தாங்களே ஏற்படுத்திக் கொண்டுள்ளனர். 44,471 பேர்கள் ஊதிய அடிப்படையில் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

அடுத்து, ''தேசீய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம்'' கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புகளைக் கூடுதலாக உருவாக்கி, மக்கள் வருவாயை அதிகரித்து, கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தி, நாட்டில் நல்ல கிராமப்புற பொருளாதார வளர்ச்சி வேலைகள் செய்து முடிப்பதற்காக உணவு தானியங்களை வழங்குதல் என்ற நோக்கங்களைக் கொண்டது இத்திட்டம். 1980ஆம் ஆண்டு அக்டோபர் மாத முதல் தமிழ்நாட்டில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ், கடந்த மார்ச் மாதம் வரை 1,73,265 வேலைகள் திறம்படச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 68 ஆயிரம் கிலோ மீட்டர் நீளத்திற்குத் தமிழகக் கிராமங்களில் பல்வேறு இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன; பல மேம்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மனித உழைப்பு நாட்கள் 164.18 லட்சம்.

இத்திட்டத்தின் கீழ்ப்பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக நாளொன்றுக்கு 1 கிலோ அரிசியும் ரூ.6.15 கூலியாகவும் வழங்கப்பட்டது. 1.12.85 முதல் 2 கிலோ கோதுமை, ஒரு கிலோ அரிசி வழங்கப்படு



கிறது. அத்துடன் ரூ. 3.15 பணமாகவும் அளிக்கப்படுகிறது. நிலமற்ற ஏழை கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும் திட்டம்தான் ''ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித்திட்டம்' . நிலமற்றவர்களின் குடும்பத்தில் ஒரு நபருக்கு ஓராண்டில் குறைந்த பட்சம் 100 நாட்களாவது வேலைவாய்ப்பு அளிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது இத்திட்டம். கடந்த மார்ச் திங்கள் வரை ஏறத்தாழ ரூபாய் 57 கோடியே 25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்



ஏறத்தாழ ரூபாய் 57 கோடியே 25 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ்

1984-85ல் 298.16 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும் என மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து இருந்தது. இந்த இலக்கையும் மிஞ்சி 314.43 லட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டன. மேலும் சாண எரிவாயு அமைப்புகளை அமைப்பதில் தமிழகத்தின் கிராமப்புறங்கள் இந்தியாவிலேயே முன்னணியில் உள்ளன. சென்ற ஆண்டு மார்ச் திங்கள் இறுதிக்குள் மொத்தம் 10 ஆயிரம் சாண எரிவாயுஅமைப்புகளை நிறுவவேண்டும் என்பது நிர்ணயிக்கப் பட்ட இலக்கு. ஆனால் நிறுவப்பட்டதோ 17,549 அமைப்புகள். அதாவது நிர்ணயிக்கப் பட்ட இலக்கை விட 7549 சாண எரிவாயுக் கலன்கள் அதிகமாக நிறுவப்பட்டுள்ளன. மேலும் சாண எரிவாயு அமைப்புகளைப் பொறுத்தவரையில் நமது மாநிலம் அகில இந்திய அளவில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 13,000 சாண எரிவாயு அமைப்புகள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சமூகக் கல்வி கிராம மக்களின் அறிவாற்றலைப் பெருக்கவும் வளர்ந்துவரும் கிராம சமுதாயத்தின் பொது அறிவினைப் பெருக்கவும் மனமகிழ்ச்சி அளிக்கவும் கிராம சமுதாய வானொலிகள் ,தொலைக்காட்சிப் பெட்டிகள் பெரிதும் பயன் அளிக்கின்றன. 43,855 கிராம வானொலிப் பெட்டிகளும் 1838 சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகளும் செயல்படுகின்றன. எல்லா கிராமங்களுக்கும் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவேண்டும் என்ற மாண்புமிகு முதல்வரின் அறிவிப்பு முனைப்புடன் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

ஊரக வளர்ச்சிப்பணியில் தமிழக அரசு முத்திரை பதித்து வருகிறது என்றால் அது மிகையாகாது.

# இந்தியப் பல்கலைக் கழகங்களில் நாட்டுப்புறவியல்



மனித வாழ்வில் இயல்பாகத் தோன்றி, விதி முறைகள் பற்றிக் கவலை கொள்ளாமல், எளிமையாகவளர்ந்து உண்மையான உணர்ச்சிகளுக்கு உறைவிடமாக விளங்கி, பாமர மக்களைக் கவர்ந்து களிப்படைச் செய்வன, நாட்டுப்புறக் கலைகள். இக்கலைகள் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிப் புகழ் பெறுகின்றன. நமது இந்திய நாட்டில் பல்வேறு மாநிலங்களிலும் நாட்டுப்புறக் கலைகள் மதிக்கப்படுகின்றன. படித்த பெருமக்கள் இக்கலை குறித்து ஆர்வம் காட்டாத காலம் ஒன்று இருந்தது. தற்போது இது பல்கலைக் கழகங்களில் பாடமாக வைக்கப்படுகிற அளவுக்குப் பெருமை பெற்று வருகிறது. நாட்டுப் புறவியல் இடம்பெற்றுள்ள இந்தியப் பல்கலைக் கழகங்கள் வருமாறு.

**தமிழ்நாடு :**

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் : தமிழியல் துறையில், நாட்டுப் புறவியல், தமிழ் முதுகலை மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது. எம்.பில் வகுப்பில் பயிலும் மாணவர்களில் பலர், நாட்டுப்புறவியலில் ஆய்வு செய்கின்றனர்.

அறிஞர் பட்டத்திற்கான ஆய்வுகளும் நாட்டுப்புறவியலில் நிகழ்த்தப்பெற்று வருகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகம் : தமிழ் முதுகலை மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது.

எம்.பில். பி.எச்டி. அளவில் ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. மாலை நேரத்தில் சான்றிதழ், நிறை சான்றிதழ் வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் : தமிழ்த் துறையிலும் மொழியியல் துறையிலும் பி.எச்டி. ஆய்வுகள் அவ்வப்பொழுது செய்யப் பெறுகின்றன.

பாரதியார் பல்கலைக் கழகம் : எம்.பில்., பி.எச்.டி. ஆய்வுகள் நிகழ்த்தப் பெற்று வருகின்றன.



**கேரளம் :**

கேரளப் பல்கலைக் கழகத்தில் எம்.பில், பி.எச்டி. ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

**கர்நாடகம் :**

மைசூர்ப் பல்கலைக் கழகம் : நாட்டுப் புறவியல் தனித்துறையாக இயங்கி வருகின்றது. முதுகலைப் பட்டப் படிப்பு, பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றது. எம்.பில்., பி.எச்டி., ஆய்வுகளும் நிகழ்த்தப் பெறுகின்றன.

இந்திய மொழிகளின் மைய நிறுவனம் (CIIL) தனித்துறையாக இயங்கி வருகின்றது.

தார்வார் பல்கலைக் கழகம் ; நாட்டுப் புறவியல் முதுகலை பட்டப் படிப்பு உள்ளது. பி.எச்டி ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

**ஆந்திரம் :**

உஸ்மானியாப் பல்கலைக் கழகம் : தெலுங்குத் துறையில் பி.எச்டி. ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

**மணிப்பூர் :**

மணிப்பூர்ப் பல்கலைக் கழகம் : மணிப்புரி மொழித் துறையில் பி.எச்டி. ஆய்வுகள் நிகழ்த்தப் பெறுகின்றன.

**அஸ்ஸாம் :**

கௌஹாத்தி பல்கலைக் கழகம். நாட்டுப்புறவியல் ஆய்வுத்துறை என்று தனித் துறையாக இயங்கி வருகின்றது. எம்.பில். வகுப்புக்கள் நடத்தப்பெறுகின்றன. எம்.பில், பி.எச்டி . ஆய்வுகளும் நிகழ்த்தப் பெறுகின்றன.

**ஆதாரம் : நாட்டுப்புறவியல் செய்திமடல்-1 17.1.86**



# தாரிணி

**இனியவன்**

கூட்டுப் பாதையில் அமைந்த அந்தக் கிராமத்தை மிகவும் நேசித்தாள், தாரிணி.

ஒரு பிரமாண்டமான ஆல மரமும், பெரிய பெரிய புளிய மரங்களும், ஊரின் வயதைக் கணக்கிடத் தூண்டின.

ஓடைக்கரையில், நீண்ட ஆயுளுடன் சலசலக்கும் அரச மரத்தருகே-புராதனமான கோயில் ஒன்று காலத்தை வென்று நின்றது. அதிலுள்ள கல்வெட்டுகள் என்னென்ன கதைகள் சொல்லுமோ?

யாராலும் தகவல் தர முடியவில்லை. வரலாறு தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாதது பற்றி இவள் வருந்தினாள்; அதற்காக அலட்டிக் கொள்ளாத ஊரார் மேல் அனுதாபப்பட்டாள்.

அப்பாவி மக்கள் அதிகமாயுள்ள ஊர்; எஞ்சியோரில், தெரிந்தாற்போல் நடிப்பவர்கள் ஏராளமான பேர். ஓரளவு விவரம் தெரிந்தவர்களும், இராமனையும், பீமனையும் அந்த மண்ணோடு இணைத்துக் கட்டுக்கதைகளையே பரப்பினர்.

எப்படிப் போனாலும் முப்பது நாற்பது கல்லுக்கு அப்பால்தான் நகரங்கள். நாலா பக்கத் தொடர்புக்கும், இரண்டு பேருந்துகள் உதவின.

சாவடிச் சுவரில் சிவப்பு முக்கோணமும், பச்சை முக்கோணமும் உற்பத்தியைச் சுருக்கவும் பெருக்கவும் வேண்டின.

எதிரே ஒரு சின்ன காவல் நிலையம். இரண்டு தேனீர்க் கடைகள். நியாய விலைக்கடை. சில பெட்டிக் கடைகள். ஒரு சைக்கிள் கடை.....

தாரிணி அந்த ஊரில் இறங்கியவுடன், முழுவதுமாய்ப் பார்வையில்பட்டது இந்தச் சைக்கிள் கடைதான்.

பஸ் நிறுத்தம் நேரெதிரே என்பதால், ஸ்டூலில் அமர்ந்து ஏதோ படித்துக் கொண்டிருந்த அரசு தற்செயலாய் நிமிரவும் -இவள் அப்படியே நின்றாள்!

அவன் சட்டென்று தலை குனிந்து ஏட்டைப் புரட்டினான்.

'மாநிறந்தான். ஆனால், என்ன ஒரு மிடுக்கு! எப்படியான கட்டழகு!' என மலைத்து தாரிணி—

''வணக்கம். என் பெயர் தாரிணி.. இந்தப் பகுதிக்குப் புது

சாய் வந்திருக்கும் கிராமசேவிகா. நாட்டாண்மைக்காரர் வீடு எங்கேன்னு சொல்லமுடியுமா?' என்று விசாரித்தாள். இதயம் ஏனோ படபடத்தது. ஏறிட்டுப் பார்த்த அரசு,''நாட்டாண்மைக்காரரா'' என்று கேட்டான்.

''ஆமா, அவரைத்தான் கேட்கிறேன். அவரிடம் போனால், வீடு ஏற்பாடு செய்து தருவார்ன்னு யூனியன் ஆபீசில் சொன்னாங்க..''

''புரோக்கர் பசங்க..'' என முணுமுணுத்தான், அவன். ''அவனிடம் போனால் வீடு ஏற்பாடு பண்ணுவான். கூடவே குடித்தனமும் வந்துடுவான்! பரவாயில்லையா?...''

''மிஸ்டர்..'' என்று ஆத்திரப் பட்டாள் தாரிணி.

''என் பெயர் அரசு..மன்னிக்கணும். உங்களை இழிவுபடுத்த நான் அப்படிப் பேசல்லே. அவன் அயோக்கியன் என்பதால் உணர்ச்சிவசப்பட்டு.. மன்னிக்கணும்..''

"என்மேல் இவ்வளவு அக்கறையா!...'' என மனம் சிலிர்த்தாள், இவள்.

கடையில், விவேகானந்தர் படம்; பாரதி படம்; பாரதிதாசன் படம்; கையில் 'சத்திய சோதனை'.

'வித்தியாசமான எண்ணங்கள் வெளிப்படையான பேச்சு! ஓ... இவரை அடையத்தான் தெய்வம் என்னை இங்கே அனுப்பி வச்சுதோ?..' ஆனந்த நினைவால் அகம் திணறியது.

''மன்னிக்கணும்...''

''பரவாயில்லை.. நான் எங்கே தங்கலாம்ன்னு சொல்லுங்க..''

''நீங்க மட்டுமா?....''

''ஊகூம்.. இடம் பார்த்தானதும், அப்பா-அம்மாவை அழைச்சிட்டு வரணும்...''

''அப்படியானா, கல்யாணி அம்மாவைப் போய்ப் பாருங்க.. தெற்குத் தெருவில் ஆறாம் வீடு'' என்றான் அரசு.

''ரொம்ப நன்றிங்க..'' என்று கைகளைக் கூப்பினாள் தாரிணி.

இந்த ஊருக்கு மாற்றம் வந்தபோது மனம் வருந்திய தாரிணி இப்போது உள்ளம் நிறைந்த உவகையோடிருந்தாள்; "இந்த மண்ணிலேயே என்றென்றும் வேரோட இதயம் விரும்புகிறது."

இவளுடைய பேச்சைக்கேட்டு விட்டு, அரசு சிரித்தான்: ''அப்படி என்னதான் மகத்துவம் இருக்குது இந்த மண்ணிலே?...''

இவள், கண்களை மூடி, மெய்மறந்த நிலையில் பேசினாள்.

''ஒரு பெரீய்ய சக்தி இருக்குதுங்க!....''

''ஓடைக்கரைச் சிவன் கோயிலா?....''

''இல்லே..இந்தச் சைக்கிள் கடையிலே!'' அவளைப் பார்த்



துப் பேசிக் கொண்டிருந்த அரசு, அடுத்த நொடியில் ஊமையா னான். உவகையும், பெருமிதமும் மின்னிய கண்களில் சோகம் கவிந்தது. மவுனமாய் 'வால்காவி லிருந்து கங்கைவரை'யைப் புரட் டினான்.

தாரிணி பெருமூச்சு விட்டாள்.

இவளால் - ஓடைக்கரைக் கோயிலில் உள்ள கல்வெட்டுக் களைப் புரிந்து கொள்ள முடியா தது போலவே அவனையும் புரிந்துகொள்ள முடியவில்லை!

இவளைப் பொறுத்தவரை, அதுவே பெரிய சங்கடம்...

இந்த நிலையில், உயிருக்கும் மேலான நேசத்திற்குரியவனின் நெஞ்சம் புரியவில்லை என்றால்.

தாரிணியால் தாங்கவே முடிய வில்லை...

'அன்பும் ஆசையுமாய்ப் பேசு கிறவர், ஏன் திடீர்த் திடீரென்று ஊமையாகிறார்? ஒரு பதற்றத் தோடு விலகுவது எதனால்? தாமரை இலைத் தண்ணீர் மாதிரி ஒட்டாமல் ஓடும் காரணம் என்ன?....' நெஞ்சின் அலைகள் நிற்பதாயில்லை.

ஒருநாள்; ''ஏங்க, என் மனசு புரியல்லையா, உங்களுக்கு? அம்மா வழி வந்த கண்ணியமும், கட்டுப்பாடும் இதுவரை எனக்கு அரணாயிருந்து காத்தாச்சு. இனி நீங்கதான் காக்கணும்!...'' என்று ஒளிவு மறைவில்லாமல் கேட்டு விட்டாள், இவள்.

ஒரு நொடி இவளை நோக்கிய வன், மறுபுறம் திரும்பி நெட்டு யிர்த்தான்.


எப்படியாவது, சந்திக்கநேரும் போதெல்லாம் தன் அன்னையின் பெருமையைக் குறிப்பிடாமல் இருப்பதில்லை. தாரிணி: ''நோயாளியாகிவிட்டஅப்பாவை, என்னுடைய அம்மாபோல் ஒருத்தி போற்றுவாளா? வறுமை யிலும் செம்மையாக வாழ, என் அம்மா மாதிரி யாரால் ஆகும்? காலத்தையும் அனுசரித்து, கவுர வத்தையும் பாதுகாத்து, அடடா! ...நான் அவங்க வயித்திலே பிறக்க, ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கணுங்க....''

அரசுக்கும் தாரிணியின் தாய் மீது அளவற்ற மரியாதை உண்டு. பெண் குலத்தின்மேல் அவனுக்கு ஏற்பட்டிருந்த மனத்தாங்கலைப் பாரதியும், பாரதிதாசனும் ஒர ளவு மாற்றியிருந்த நிலையில்— இவளும், இவளுடைய அன்னை யும் அறவே நீக்கிவிட்டார்கள்!

'லட்சுமீகரமான போக்கு..இங் கிதமான பேச்சு!.. பெண்கள் என்றால் இப்படி யல்லவா இருக் கணும்!....' அரசு பெருமூச்சு விட்டான்.

**'கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆயர் மகள்'**

**—கலித் தொகை**



''என்னை மறந்துடு தாரிணி'' ..என்றான் அரசு, சைக்கிளுக்குக் காற்றடித்தபடியே.

''எங்கே, என்னைப் பார்த்துச் சொல்லுங்க?..ஏன் மறக்கணும்?'' என்று எதிரே வந்து நின் றாள். தாரிணி.

''அரசு...பஞ்ச்சர் ஒட்ட ணும்ப்பா...'' என யாரோ குரல் கொடுக்கவும், தாரிணி தயங்கிப் புறப்பட்டாள்.

''நல்ல பொண்ணுப்பா அரசு. கிராம சேவிகான்னா, இவதான் அசல் கிராம சேவிகா! எல்லாருக் கும் எந்தெந்த வகையிலே உதவ முடியுமோ, அந்தந்த வகையிலே உதவறா. ஏழைபாழைங்களுக்கு இதய சுத்தியோடு பாடுபடறா. இந்த வட்டாரத்திலே தேர்தல் வந்தா, தாரிணி சுலபமா ஜெயிக் கலாம்!...'' என்று பாராட்டி னான், வந்தவன்.

அரசு பேசவில்லை...

''ஊர்லே யார் யாருக்கோ இவ மேலே ஒரு கண்ணு. ஆனா

இவ கருத்தெல்லாம் உன் மேலே தான்னு தெரியுது! அரசு! நீ குடுத்து வச்சவன்தாம்ப்பா!..''

இவன் அமைதியாய் 'டியூ'பைக் கழற்றி ஆய்வு செய்தான்.

''தகாதவன் எல்லாம் கூட, அவ மேலே ஆசை வச்சிருக்கான் அரசு. சட்டுப்புட்டுன்னு அவ கழுத்திலே ஒரு தாலி போட்டுடு. வலிய வரும் சீதேவியை இழந்துடப்போறே...''

அரசு கருமமே கண்ணாயிருந்தான்...

தாரிணி மீண்டும் அங்கே வந்தபோது, அவன் இல்லை!

சைக்கிள் கடை பூட்டியிருந்தது!

கடைக்குத் தேவையான பொருள்களை வாங்க, நகருக்குப் போயிருப்பானோ?

இவள் குழப்பத்தோடு நடந்தாள்...

அரசிலைகள் காற்றில் தாளமிட்டன... சிவன் கோயில் கோபுரத்தின் உயரே கிளிகள் பறந்தன.

இவள் படியேறிப் போனாள்..

கல்வெட்டுக்களைப் பார்க்கையில், பெருமூச்சு வழிந்தது. அரசின் நினைவு கனம் கூட்டியது. மெல்ல வெட்டெழுத்துக்களை வருடினாள்...

படியிறங்கி, ஓடைக்கரையில் நடந்தாள். தாழம்புதர் மண்டிய திடலில் அரசுவின் முதுகு புலப்பட்டது...

முழங்கால் அளவுத் தண்ணீரில் புடவை நனைய நடந்து, ''என்ன இது புதுப்பழக்கம்! வியாபார நேரத்தில் கடையை மூடிட்டு, இந்தத் தீவிலே தியானம் செய்ய நீங்களோ?'' என வியப்போடு வினவினாள், இவள்.

அவன், ஆழ்ந்த சோகத்தோடு இவளை நோக்கினான்:''என்னெ மறந்துடு தாரிணி! உத்தமமான உன் அம்மாவுக்கு மாப்பிள்ளையாகிற தகுதி எனக்கு இல்லை தாரிணி! உனக்கு ஒரு....''

ஊடே இவள் குறுக்கிட்டாள்: ''உங்களை விட அந்தத் தகுதி வேறு யாருக்குமே கிட்டப்போறதில்லை! தன்மானம் தலையெடுத்த நிலையிலே, ரோஷத்தோடு பாசத்தை உதறி, ஊரைத் துறந்து, உங்க காலால் நீங்க நிற்கிறீங்களே - இந்தத் தன்மை எல்லாருக்கும் வந்துடுமா?....''



'எனக்கு' என்ற எண்ணம் வராமல் 'நமக்கு' என்ற எண்ணம் வர வேண்டும். அப்படிப்பட்ட எண்ணம் வளர்ந்தால் நாட்டில் ஒற்றுமை வளரும். சாதிக்கொள்கை ஒற்றுமையை ஏற்படுத்தாது. மதத்தின் பெயரால் தூய்மை தெரியவில்லை. தாழ்வுதான் தெரிகிறது. இத்தகைய சாதி உணர்வுகளை அகற்ற குளுரை ஏற்போம்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் எம்.ஜி.ஆர்.

''தாரிணி?....''

''கல்வெட்டாய் உங்க கருத்தில் பதிஞ்சிருக்கிற கதையை, நான் கண்டுபிடிச்சிட்டேங்க!...''

அவன்மெலிதாக அதிர்ந்தான். அவனால் இவளை நேருக்கு நேர் பார்க்க முடியவில்லை.

''உங்கம்மா களங்கப்பட்டதுக்கு உங்கப்பாதான் காரணமாம்! அது ஒரு அவலம்தான். ஆனா, நீங்க குழந்தையாய் இருந்தப்ப நேர்ந்த இழுக்கை எண்ணி, ஏன் மறுகிமாயணும்? உங்கப்பா குடிக்கு அடிமையாகி அகாலமாய் இறக்கவும், வேறு வழி தெரியாமல், உங்கம்மா தன்னைச் சீரழிச்சவனோடு வாழும்படி ஆகியிருக்குது....''

நெடுநாள் வரை அந்த ஆசாமியைத் தன் தந்தையென்று எண்ணியிருந்த அரசு, தெருப்பையன்களுடன் ஏற்பட்ட சண்டையால் வசவுக்கு ஆளாகி-தன்னைப் பற்றிய உண்மையறிந்து அதிர்ந்தான்.

மீசை அரும்பியிருந்த பருவம். இவனிடமிருந்து வெடித்துச் சிதறிய வார்த்தைக் குண்டுகளால் அம்மா அதிகம் காயப்பட்டாள். அவளுடைய அழுகை, கெஞ்சல், சமாதானம் யாவும் பயனற்றுப் போயின....

''இனி நான் உன் மூஞ்சியிலே விழிக்க மாட்டேன்! அதே மாதிரி நீயும் என்னைத் தேடிக் கண்டுபிடிச்சி மாய்மாலம் பண்ண நினைக்காதே! எங்காவது நான் மானத்தோடு° ◦ பிழைச்சிருக்கணும்ன்னா, என் முகத்தில் எப்பவுமே விழிக்காதே! சின்னப் பையன்தானே என்னமோ சொன்னானேன்னு வந்தியோ, சத்தியமாய் நான் தற்கொலை செய்துக்குவேன்'' என ஆணையிட்டுவிட்டு, எங்கெங்கோ வந்து அலைந்து, இதோ இந்த ஊரில் நிலைத்தான்.

'நம் கதையை இவள் அறிஞ்சது எப்படி? சில ரகசியங்கள் காத்திலே கலந்து, ஆச்சரியப் படும்படி பரவிப் போகுதே-எவ்வாறு?....'

''தாயோ, தாரமோ, மகளோ சகோதரியோ கண் முன்னாலேயே சோரம்போய்ச் சொத்து சம்பாதிச்சா, அதைக் கூசாமல் அனுபவிக்கிறவங்க இந்தச் சமுதாயத்திலே எவ்வளவோ பேர் இருக்காங்க! ஆனா, உங்கம்மாவின் பிரச்சினையில் ஓரளவு நியாயம் இருந்த போதிலும், நீங்க அவங்களை மன்னிக்கத் தயாராயில்லே! அதுக்காக, அவங்க நிரம்பவும் பெருமைப் படறாங்க....!''

''தாரிணி!....நீ.... என்ன சொல்றே?....''

''கற்பு நெறிங்கறது, ஆண்-பெண் இருசாராருக்குமே பொதுவானதுங்க. ஒரு பெண்ணைக் கெடுப்பதைப் போலவே, கெடவிடறதும் குற்றம்தான். இதை உணர்ந்தால், உங்களிடமிருக்கிற தாழ்வு மனப்பான்மை போயிடும் என்று நெகிழ்ச்சியுடன் பேசினாள், தாரிணி.

அரசு மெதுவாக இவளுடைய கைகளைப் பற்றினான்... ''தாரிணீ..!'' என மூச்சால் உச்சரித்தான்!

# குமரி மாவட்ட பேரூராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்



கன்னியாகுமரி மாவட்டத்தில் 1984-85-ஆம் ஆண்டில் 44 பேரூராட்சிகளிலும் மற்றும் கன்னியாகுமரி நகரியத்திலும் மூன்றாம் கட்ட தன்னிறைவுத் திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பேரூராட்சிக்கும் தலா ரூ. 2.92 இலட்சம் வீதம் ரூ. 131.40 இலட்ச ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் குடிநீர் வடிகால்வாரியம் மூலமாக 19 பாதுகாக்கப்பட்ட குடிநீர்ப் பணிகளும் பேரூராட்சிகள் மூலம் 76 பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. 358 இணைப்புச் சாலைப் பணிகளும், சிறு பாலங்கள் 92-ம் கழிவுநீர் வடிகால்கள் (சாக்கடைகள்) 137 பணிகளும், ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானத்திற்குச் செல்லும் பாதைப் பணிகள் 5-ம் சலவைத் தொழிலாளர்களுக்குச் சலவைத்துறைப் பணிகள் 2-ம் செய்யப்பட்டுள்ளன. மேற்படி பணிகள் மொத்தம் 689-ல் இதுவரை 629 பணிகள் செய்து முடிக்கப்பட்டு அரசு மானியம் ரூ.131.40இலட்சத்தில்ரூ.119.81 செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள 60 பணிகளும் கூடிய விரைவில் முடியும் தறுவாயில் உள்ளன.

தமிழ் நாடு அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், திட்ட அலுவலகம் மூலம் செலவு செய்யப்படும் தேசிய வேலை வாய்ப்புத் திட்ட நிதியில் 15% பேரூராட்சிப் பகுதிகளுக்கென்று ஒதுக்கீடு செய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 1985-86-ஆம் ஆண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் அடியிற்கண்ட பேரூராட்சிகளுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது.

கொட்டாரம் பேரூராட்சி - (அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்) கணபதிபுரம் - (ராஜாக்கமங்கலம் ஒன்றியம்) மண்டைக்காடு-(குளிந்தங்கோடு ஒன்றியம்) முளகுமூடு - (தக்கலை ஒன்றியம்) பேச்சிப்பாறை - (திருவட்டார் ஒன்றியம்) நல்லூர் - (கிள்ளியூர் ஒன்றியம்) கடையால் - (மேல்புறம் ஒன்றியம்).

இத்திட்டத்தின் கீழ் சொந்த அலுவலகக்கட்டடம் இல்லாத மேற்கண்ட ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஒரு அலுவலகக் கட்டடமும், மேலும் சமூகநலக் காடுகள் திட்டத்தின் கீழ் மரக் கன்றுகள், நாற்றங்கால்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு இந்தத் திட்டத்துக்காக அரசு ரூ. 11.11 இலட்சம் அங்கீகரித்துள்ளது.


மேலே கண்ட 7 பேரூராட்சிகளிலும் குளக்கரை, பாதை, மற்றும் பேரூராட்சி புறம்போக்கு நிலங்களில் சமூகநலக் காடுகள் வளர்க்க 133.25 எக்டேர் நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ரூ.2,15,250 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பேரூராட்சிப் பகுதிகளில் சமூக நலக் காடுகள் திட்டத்தில் இவ்வாண்டு 13,454 மனித வேலை நாட்கள் கொடுக்கப்படும். மேலும் பேரூராட்சிகளில் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படுவதன் மூலம் இவ்வாண்டு 50,000 மனித வேலை நாட்கள் கொடுக்கப்படும்.

**ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்:**

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86 ஆண்டுக்கு பூதப்பாண்டி பேரூராட்சியில் ரூ. 20 இலட்சம் செலவில் வளர்ச்சிப் பணிகள் செய்யப்படவுள்ளன. சந்தை விரிவாக்கம், கடைகள் கட்டிப் பேருந்து நிலையம் அமைத்துக் கொடுத்தல் போன்ற பணிகள் இந்தத் திட்டத்தில் கீழ்ச்செய்யப்பட உள்ளன.

**மு. கிருட்டிணன்,**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கன்னியாகுமரி மாவட்டம்.



# விளையும் பயிர்

## மாணவர் பக்கம்

தஞ்சை மாவட்டம் பூண்டி அ.வீ. வா. நினைவு ஸ்ரீ புட்பம் கல்லூரியில், இளங்கலை தாவரவியல் மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவர் ச.புகழேந்தி. இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் மிகுந்த ஆர்வங்காட்டு கிறார். யோகாசனப் போட்டியிலும் பரிசு பெற்றுள்ள இவர், 'அலைகள்' எனும் கையெழுத்துப் பத்திரிகையையும் நடத்தி வருகிறார்.



சென்னை, காயிதே மில்லத் கலைக் கல்லூரியில் இளங்கலை வரலாற்றுத்துறை மூன்றாமாண்டு பயிலும் மாணவி ஜெஜலட்சுமி பார்த்த சாரதி. இவர் கட்டுரை, பேச்சுப் போட்டி, கருத்தரங்கம், நடிப்பு போன்றவற்றில் அனைத்துக் கல்லூரி அளவில் நடைபெற்ற போட்டிகளில் பரிசுகள் பெற்றுள்ளார். விளையாட்டுப் போட்டிகளிலும் மிகுந்த ஆர்வங்காட்டுகிறார்.

* காய்கறிகளில் வெள்ளரிக்காய் மிகச் சிறந்தது. உடலைக் குளிர்ச்சியாக வைத்து, உடம்பில் உள்ள வேண்டாத கழிவுநீரை எளிதில் வெளிப்படுத்தும்.

* சாறு பெரிதும் உடைய பழங்களில் தர்ப்பூசணி மிகச் சிறந்தது. இது ரத்தத்தைச் சுத்தம்செய்யும். மலம் இளக்கி, சிறுநீரை நன்கு வெளிப்படுத்தும். இதன் விதைகள் ஊட்டம் தரவல்லவை.




# வனவிலங்கைக் காப்போம்!

காடுகளையும், அங்கே வாழும் விலங்கினங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். காடுகளை அழிப்பதோ, விலங்கினங்களைக் கொல்வதோ நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும்.

இன்று வனவிலங்குப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இயற்கை எழிலையும், வளத்தையும் பாதுகாக்கவும், விலைமதிப்பிட முடியாத இயற்கை வளத்தைத் திறம்படப் பயன்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மனித சமுதாயம் தொடர்ந்து வாழ வேண்டுமென்றால், வனவிலங்குப் பாதுகாப்பு அவசியமானதாகும். அவையின்றி நாம் வாழ முடியாது. உலகத்தில் வாழும் உயிரினங்களில் நமது இனமும் ஒன்று. ஏதாவது ஒரு இனம் பாதிக்கப்பட்டாலோ சிதைந்தாலோ மற்ற இனங்களும் பாதிப்படையும். இந்த உண்மையை நாம் புறக்கணிக்க முடியாது.

''இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் பயனடைவதற்காக இறைவன் இவ்வுலகை உருவாக்கியுள்ளார். மற்ற உயிரினங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு பயன்களை அனுபவிக்க ஒவ்வொரு உயிரினமும் கற்றுக் கொள்ள வேண்டும். ஒரு உயிரினம் மற்றொரு உயிரினத்தின் உரிமையைப் பறித்துக்கொள்ள வேண்டாம்'' என்று ஈஷோபனிஷத்தில் அழகாக எடுத்துரைக்கப்பட்டுள்ளதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.



# இந்தியாவின் தீர்க்கதரிசி

இந்தியாவின் தீர்க்கதரிசி ரவீந்திரநாத் தாகூர் என்றால் மிகையாகாது. குருதேவர் என மக்களால் மரியாதையுடன் அழைக்கப்பட்ட தாகூர் இந்தியாவின் படைப்பாற்றல் கொண்ட தொலைநோக்கின் உருவமாகத் திகழ்ந்தார். தேசிய போராட்டத்தில் அவர் மிகுத்த ஈடுபாடு கொண்டிருந்தார், இந்திய இலக்கியத்தின் மூலம் அதனுடைய படைப்பாற்றலை மீண்டும் உயிர்ப்பிக்க அவர் விரும்பினார். இந்தியாவின் பார்வையை மனிதாபிமான தத்துவம் மற்றும் நவீன கருத்துக்கள் கொண்ட உலகப் பார்வையாக அவர் விரிவு படுத்தினார்.

அவரது 'கீதாஞ்சலி' என்ற கவிதைக்கு 1913-ஆம் ஆண்டு நோபல் பரிசு கிடைத்தது. படைப்பு உணர்வின் சின்னமாக இது திகழ்கிறது. சாந்திநிகேதன் அவரது கல்வி முறையின் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. விசுவபாரதி பல்கலைக்கழகம் அவரது உலகளாவிய பார்வைக்குச் சான்றாகக் காட்சி தருகிறது.

அவர் 2200 பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றில் நாளில் ஒரு பகுதி தாய்நாட்டைப் பற்றிய பாடல்கள், தனது பாடல்கள் மூலம் தேசபக்தி உணர்வுகளை ஊட்டினார்.

இந்தியாவைப் பற்றிய ஒரு புதுமையான கண்ணோட்டம் அவருக்கு இருந்தது.

தனது சொந்த கலாச்சார, சமூக, அரசியல் கொள்கைகளிலேயே இந்தியா நிற்கவேண்டும் என்று அவர் விரும்பிய இந்திய தேசியத்தில் கலாசாரச் சாராம் சம் நிறையவே இருந்தது. இந்தியாவிலுள்ள கலாச்சாரங்களைப் பற்றி அவர் அறிவார்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பது அவர் வலியுறுத்தி வந்த கோட்பாடு.

கலாச்சார மாறுபாடுகள் மோதல் அம்சங்கள் கொண்டவை அல்ல. இந்தியா எந்த கலாச்சாரத்தையும் ஏற்று புதிய பொலிவுடன் திகழக்கூடிய பரந்த சமூக முறையைக் கொண்டது. அதன் ஒற்றுமை ஆற்றல் அபாரமானது. எனவே கற்பனையாக எதிரிகளை நினைத்து அச்சம் கொள்ளத் தேவையில்லை.

இந்து, புத்த, முஸ்லீம், கிறிஸ்தவ மதங்கள் இங்கு மோதத் தேவையில்லை. இந்திய மண்ணில் அவை ஒற்றுமையாக வளரலாம் என்பது அவரது கருத்து. இந்திய கலாசாரத்தைப் பல சிற்றாறுகள் கலக்கும் மகா நதிக்கு அவர் ஒப்பிட்டார்.

தனது நாடகங்களில் மூடப் பழக்கவழக்கங்கள், சம்பிரதாயச் சடங்குகள், வன்முறை வெறியாட்டங்களை எதிர்த்து போர்க் கொடி உயர்த்தியுள்ளார். சாதி முறையை வன்மையாகக் கண்டித்தவர் அவர். கடவுள் விக்கிரகங்களுக்கு மிருகங்களைப் பலியிடுவதை அவர் எதிர்த்தார்.

கிராம விழாக்களை அவர் ஊக்குவித்தார். மரம் நடுவிழா, அறுவடை விழாக்களை கிராமப் புறங்களில் அவர் செயல்படுத்தினார். இந்திய தேசியத்தின் உண்மையான வளம் கிராமங்களை நம்பியே உள்ளது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர் தாகூர்.

வகுப்பு அறைகள் மற்றும் பாடப்புத்தகங்களோடு கல்வி நின்று விடுவதாகக் கருதக்கூடாது என்று அவர் கூறினார். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மிகுந்த இடைவெளி காணப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்று விரும்பிய அவர், தனது விசுவபாரதி பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறை காட்டினார். ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனிப்பட்ட முறையில் அவர் அக்கறை எடுத்துக் கொண்டார்.

## 'அக்குபஞ்சர்' இந்தியாவில் தோன்றியது!

"அக்குபஞ்சர்" சிகிச்சை முறை இந்தியாவில் தோன்றியது என்று ரஷ்ய அறிவியல் அறிஞர் கூறுகிறார். உடல் முழுவதும் ஊசிகளால் குத்தி, தீராத நோயையும் விரைவில் குணப்படுத்தும் நூதன மருத்துவ முறைக்கு 'அக்குபஞ்சர்' என்று பெயர். இந்த மருத்துவம் சீனாவில் தோன்றியது என்று பரவலாகக் கூறப்படுகிறது. எனினும் இது இந்தியாவில் தோன்றியது தான் என்று ஒரு ரஷ்ய அறிவியல் அறிஞர் ஆதாரத்துடன் கூறுகிறார்.

ரஷ்யாவிலிருந்து வெளியாகும் "அறிவியல் கல்வி" எனும் இதழில் இவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். கி.பி. 637-ஆம் ஆண்டு இந்தியாவில் ஹர்சவர்த்தனர் ஆட்சி நடைபெற்றபோது டிஸ்சின் என்ற ஒரு சமஸ்கிருத அறிஞர் சீனாவிலிருந்து இந்தியா வந்தார். நாலந்தா பல்கலைக் கழகத்தில் அவர் பல்லாண்டுகள் கல்வி கற்றார். இந்தியாவில் நிலவிய "அக்குபஞ்சர்" மருத்துவ முறையை நன்கு கற்ற அவர் சீனா திரும்பி அங்கு அந்த முறையைப் பிரபலப்படுத்தினார். 'காலப் போக்கில் இந்தியர்கள் அதை மறந்துவிட்டனர். சீனர்கள் அதைப் பின்பற்றி வருகின்றனர்' என்று இந்த அறிஞர் கூறுகிறார்.

# களிமண்ணில் கைத்திறம்



களிமண்ணில் கைத்திறமை காட்டும் கலைஞர்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, உலகத்திலும் புகழ்பெற்று விளங்குகிறார்கள், அவர்களில், புதுக்கோட்டை மாவட்டத்தைச்சேர்ந்த திரு பழனியப்பனும் ஒருவர்.

''டெர்ரக்கோட்டா'' என்று சொல்லப்படும் மண்ணினால் நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் கூடிய கலைப்பொருட்களைச் செய்யும் திறமை பெற்றவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏராளம் பேர் இருக்கிறார்கள். இவர்கள், ஐயனார் கோவில் குதிரைகள், காளைகள், யானைகள், ஐயனார் சிலைகள், இதர உருவங்கள் போன்ற கைவினைப் பொருட்களைச் செய்பவர்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மழையூர், வாராப்பூர், சத்தியமங்கலம், பரம்பூர், வீராச்சிலை, நரங்கியம்பட்டு, குசலாக்குடி போன்ற கிராமங்கள், அறந்தாங்கி நகர் போன்ற ஊர்களிலும் இக்கலைத் தொழிலைக் கைத்தொழிலாகக் கொண்டோர் காணப்படுகிறார்கள்.

இம்மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில், குடுமியாமலை போன்ற பல்வேறு ஆலயங்களில் உள்ள பழங்காலத் தமிழகக் கலைச் சிற்ப வேலைப்பாடுகளை வெளி உலகுக்கு எடுத்துக் கூறும் வகையில், அவ்வாலயங்களில் உள்ள சிற்ப வேலைகளைப் போலவே மண்வேலைப்பாடுகளில் செய்து அதனைக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விற்பனை செய்யவும், அதன் மூலம் இக் கலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பொருளாதார வாழ்வில் வளம் பெறவும் தக்க முயற்சிகளை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரிஜேசுவர் சிங், இ.ஆ.ப., மேற்கொண்டு வருகிறார்.

**சி. பி. இராமநாதன்,**
மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
புதுக்கோட்டை.

அமெரிக்காவின் தலைநகரான வாஷிங்டன் நகரில் கடந்த 1985 ஜூலை - ஆகஸ்டு திங்களில் நடைபெற்ற ''ஆதிதி'' என்ற இந்தியத் திருவிழாப் பொருட்காட்சியினை 1985 ஜூன் திங்கள் 13ஆம் நாள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் துவக்கி வைத்தார்.

இப்பொருட்காட்சியில் 6, 8, மற்றும் 10 அடி உயரம் உள்ள வீரபத்திரர், இரு மனைவிகளுடன் உள்ள அய்யனார் ஆகிய கலைவேலைப்பாடு கொண்ட சிலைகள் எடுத்துச் செல்லப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இதன் மூலம் இந்தியாவின், தமிழகத்தின், குறிப்பாக புதுக்கோட்டை மாவட்டத்தின் கலைச் சிறப்பு உலகு அறிய வாய்ப்பாக இருந்தது.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு பழனியப்பன் கைவண்ணத்தால் உருவான இந்த மண் கலைப் பொருட்கள் பொருட்காட்சியில் இடம்பெற்று எல்லார் மனத்தையும் வெகுவாகக் கவர்ந்தன.

டெல்லியில் நடைபெற்ற ஆசியாட்-72 பொருட்காட்சியிலும், 1982-ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் நடைபெற்ற ''இந்தியத் திருவிழா' பொருட்காட்சியிலும் பங்கு கொண்டு தமிழக மண்ணிலிருந்து செய்யப்பட்ட கலைப் பொருட்களின் தன்மையை உலகிற்குத் தெரிவித்த திரு பழனியப்பனுக்கு 1983 ஆம் ஆண்டு இந்தியப் பேரரசு தேசிய விருது கொடுத்து கௌரவித்துள்ளது. விருதினைக் கடந்த ஆண்டு (1985) ஏப்ரல் மாதம் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள் டெல்லியில் வழங்கினார்





# பாவேந்தர் வாழ்க்கை வரலாற்று நூல்

புரட்சிக் கவிஞர் பாரதிதாச னின் மைந்தர் கவிஞர் மன்னர் மன்னன் எழுதிய 'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' என்ற நூல் வெளியீட்டு விழா பாரதிய வித்யா பவனில் (2.2.86) நடை பெற்றது.

மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் இவ்விழா விற்குத் தலைமை தாங்கி, புத்த கத்தை வெளியிட்டார். முதல் படியைப் பாரி நிலையம் உரிமை யாளர் திரு அ. செல்லப்பன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

புரட்சிக் கவிஞரின் பாடல் களை இசையோடு குடந்தை சீனிவாசன் பாட-விழா தொடங் கியது. புலவர் இளஞ்செழியன் வரவேற்புரையாற்றினார். கவி ஞர்கள் அ. மறைமலையான், பொன்னடியான், செல்வம் ஆகி யோர் வாழ்த்துக் கவிதை பாடி னர்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர் திரு சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்கள் தமது வாழ்த்துரையில், ''தமிழ் வளர்ச்சி பெற மேலும் பல முயற்சிகள் செய்யப்பட வேண்டும். அதற்குத் தடை யென்றால் — காரணமானவர் களைத் தண்டிக்கும் நிலை வர வேண்டும். அப்போதுதான் தமிழ் தழைக்கும். இந்த வகை யில் புரட்சிக் கவிஞரின் மனத் திண்மையும் ஆற்றலும் நமக்கு வரவேண்டும்'' என்றார்.

தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் டாக்டர் ஔவை. து. நடராசன் அவர்கள் — ''புரட்சிக் கவிஞரை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிற இந்த நூல், இருபதாண்டுக் கால இடை யறாத முயற்சியில் உருவாகி யிருக்கிறது. ஒரு சிறந்த பிள்ளை தனது தந்தையைப் பற்றி எழுதிய மிகச் சிறந்த குறிப்பு இந்த நூல். இது தந்தைக்கு ஆற்றும் கைம் மாறு அல்ல; தமிழுக்குத் தருகிற தீங்கனிச் சாறு'' என்று தமது உரையின்போது குறிப்பிட்டார்.

''அதிகம் எழுதியதற்காக அல்ல; நல்ல புலவராக, தலை சிறந்த மனிதராக வாழ்ந்ததற் காகவே புரட்சிக் கவிஞருக்குப் பெருமை. மறைமலை அடி களைப் பற்றி அவரது பிள்ளை மறை திருநாவுக்கரசு ஒரு புத்தகம் எழுதினார். இப்போது புரட்சிக் கவிஞரின் பிள்ளை தம் தந்தை யைப் பற்றி இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்த வகை யில் வெளிவரும் இந்த இரண்டா வது புத்தகம் மிகச் சிறப்பாக இருக்கிறது'' என்று தன்னுடைய வாழ்த்துரையில் போக்குவரத்து ஆணையரும், பச்சையப்பன் அறக் கட்டளைத் தலைவருமான திரு எஸ். டி. காசிராஜன், இ. ஆ. ப. அவர்கள் தெரிவித்தார்.

'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' நூலை வெளியிட்டு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப் பிட்டதாவது:

''புரட்சிக் கவிஞர் பாரதி தாசனைப் போல எழுச்சிக் கவிதைகள் இயற்றிய கவிஞர் வேறு யாருமில்லை. அவர் வாழ்க்கையில் 1947வரை ஏற் பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றி அவரது மகன் கவிஞர் மன்னர் மன்னன் தொகுத் தெழுதியிருக்கும் சிறந்த நூல் இது. 1947க்குப் பிறகு நடந்த அவரது வாழ்க்கைச் சம்பவங்கள் இனிவரும் இரண்டாம் தொகுப் பில் இடம் பெறும் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. புரட்சிக் கவிஞரோடு உடனிருந்து தான் கண்ட செய்தி, கேட்ட செய்தி, கருதிய செய்தி ஆகியவற்றை மட்டுமல்ல; அவர்பட்ட துன் பங்கள், அவரால் தான்பட்ட துன்பங்கள்; அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள், கண்ட தோல்விகள் ஆகியவற்றையும் உண்மையை மறைக்காமல் பட்ட வர்த்தனமாக இந்நூலில் கவிஞர் மன்னர் மன்னன் தெரிவித்திருக் கிறார். இந்த அரிய முயற்சியை எடுத்துக்கொண்டதற்காக இவரை வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.''

நூலாசிரியர் கவிஞர் மன்னர் மன்னன் தமது நன்றியுரையின் போது— ''வேருக்கு வெந்நீர் பாய்ச்சுவோர் மலிந்த இந்த நாட்டில், பன்னீர் பாய்ச்சுவது போல என் முயற்சிக்கு உதவிய நல்ல உள்ளங்களுக்கு நன்றி. என் தந்தை புரட்சிக் கவிஞரின் பெயரால் ஒரு பல்கலைக் கழகமே கண்ட ஆட்சியாளர் களின் அடிகளுக்கு என் இதய நன்றி எப்போதும் உண்டு'' என்று தெரிவித்தார்.

'கருப்புக் குயிலின் நெருப்புக் குரல்' ஆசிரியர் கவிஞர் மன்னர் மன்னன், அதைப் பதிப்பித்த முத்துப் பதிப்பகம் உரிமையாளர் திரு மு. இலட்சுமணன் இருவருக் கும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இவ்விழாவில் பொன் னாடை போர்த்திச்சிறப்பித்தார்.



# மதுரை மாவட்டத்தில்....

மதுரை மாவட்டத்தில் நிலையூர்க் கால்வாயைச் சீரமைக்கும் திட்டம் ஒன்று ரூ.17 கோடி செலவில் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் முடிவடையும். இதனால் புதிய ஆயக்கட்டுகளில் 4700 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கும். மேலும் நிலக்கோட்டை, வாடிப்பட்டி, மதுரை தெற்கு தாலுகாக்களில் பாவிக்கிடக்கும் ஏற்கெனவே உள்ள ஆயக்கட்டுகளில் 12900 ஏக்கர் நிலத்திற்கான பாசன வசதி நிரந்தரமாகும் என்றும், முள்ளிப்பள்ளம் கிராமம் அருகே 'ரெகுலேட்டர்' கட்டவும், விரகனூர் மற்றும் பெருங்குடி 'ரெகுலேட்டரை' இணைக்கும் புதிய கால்வாய் தோண்டவும் இந்தத் திட்டம் வகை செய்கிறது. இந்தத் திட்டத்தினால் வலையங்குளம், கம்பிக்குடி கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் மேலும் 5500 டன் உணவு உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காகப் பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 77 குளங்களில் நிரந்தரமாக தண்ணீர் இருக்க வழிசெய்யப்படும்.

திருமங்கலம் முக்கிய கால்வாய் தென்கரைக் கால்வாயோடு இணைக்கும் திட்டத்திற்காக ரூ. 29 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 408 ஏக்கர் நிலம் இரு போகச் சாகுபடி செய்யப் பயன்பெறும். நிலையூர் கால்வாயை மேம்படுத்தி வலையன்குளம், கம்பிக்குடி ஆகிய இடங்களுக்குப் பாசன வசதி விரிவுபடுத்தப்படும்.

பிரிக்கப்படாத மதுரை மாவட்டத்தில் ஏற்கெனவே 200 தொலைக்காட்சிப் பெட்டிகள் ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதில் மதுரை மாவட்டத்திற்கு 145 தொலைக்காட்சிப் பெட்டிகளும், அண்ணா மாவட்டப் பகுதிக்கு 55 தொலைக் காட்சிப் பெட்டிகளும் வழங்கப் பட்டன. இதற்கான செலவு ரூ. 10 இலட்சம்.

தற்பொழுது மதுரை மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊராட்சிகளுக்கு 125 தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கெனச் செலவு சுமார் ரூ. 6.25 இலட்சமாகும். ஆக மொத்தம் மதுரை மாவட்டத்திலுள்ள 270 தொலைக்காட்சிப் பெட்டிகள் ஊராட்சிகளுக்கு ரூ. 16.25 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. வரதராஜுலு, இ.ஆ.ப. அவர்கள், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையரிடம் வழங்கினார்.

## மணமக்களுக்குத் 'தமிழரசு' பரிசு

திருமண விழாவில் மணமக்களுக்கு வழக்கமான பரிசுகள் தருவதைக் கேள்விப் பட்டிருக்கிறோம். புதுமையானதோர் பரிசு வழங்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

உதகமண்டலத்தில் 21.12.85 அன்று நடைபெற்ற திருமண விழாவில் மணமக்களுக்குத் தமிழ்நாடு அரசின் அதிகாரபூர்வ மாதமிருமுறை இதழான 'தமிழரசு' ஒன்று பரிசாக வழங்கப்பட்டது. மணமக்கள் எ. பேட்ரிக் - எ. ஜெயா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட குடும்ப நலத்திட்ட ஆலோசனைக்குழு உறுப்பினரான திரு பி. ஏ. காணிக்கராஜ் அவர்களால் வழங்கப்பட்ட 1.12.85 நாளிட்ட 'தமிழரசு' இதழ் பொருத்தமான பரிசாக அமைந்தது!



அந்த இதழில் அரசு தலைமைச் செயலாளர் திரு டி.வி. அந்தோணி அவர்கள் எழுதியுள்ள 'குடும்ப நலம் காத்திடுவோம்' என்ற கட்டுரையின் இறுதியில் ''இப்பொழுது நாம் என்ன செய்ய வேண்டும்? திறப்பு விழா, திருமணம், திரைப்படம், நேர்முகப்பேட்டி முதலான அனைத்து நிகழ்ச்சிகளிலும் குடும்ப நலத் திட்டத்தின் அவசியம் பற்றி பயிற்சி பெற்ற பேச்சாளர்களால் மக்கள் மனத்தில் பதியும் வண்ணம் உணர்த்த வேண்டும்'' என்று அவர் கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தகவல்
**ரெ. அண்ணாதுரை**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்.

# வடஆர்க்காடு மாவட்டத்தில்

வேலூர் மையக் கூட்டுறவு வங்கி கடந்த 68 ஆண்டுகளாக, மாவட்டத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் கடன் தேவைகளையும் பூர்த்திசெய்து: உழவுக்கும் தொழிலுக்கும் சிறப்பாக உதவி, தன்னிகரற்ற பணியினை ஆற்றி வருகின்றது.

இவ்வங்கியில் 804 கூட்டுறவுச் சங்கங்களும், மாநில அரசும் உறுப்பினர்களாக இணைந்துள்ளன. இதைத்தவிர 79,868 'பி' உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூ. 234.93 இலட்சங்கள் உள்ளன.

மாவட்ட அளவில் இதன் கிளைகள் 43 உள்ளன. 35,528 விவசாயிகளுக்கு 1.4.85 முதல் 25.10.85 முடிய 6 மாதக் காலத்தில் குறுகிய காலச் கடனாக மட்டும் ரூ. 704.97 இலட்சம் வழங்கியுள்ளது. சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் விவசாய வேலையற்ற நாட்களில் அவர்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் விவசாயத்துடன் இணைந்த உப தொழில்களான ஆடு வளர்த்தல், பால் உற்பத்தி போன்ற தொழில்களுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அரசு மானியத்துடன் கடன்கள் வழங்குகின்றது.

தேசிய பெருக்க நிதியுதவித் திட்டத்தின் கீழ் 1983-84ஆம் ஆண்டு முதல், கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இதன்மூலம் புதிய கிணறு வெட்டுதல், கிணறு ஆழப்படுத்துதல், சுற்றுச் சுவர் கட்டுதல், பம்புசெட் அமைத்தல் போன்ற வேலைகளுக்குக் கடன் வழங்குகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட கடன்களில் அக்டோபர் '85ல் நிலுவை ரூ.121.09 இலட்சமாகும்.

அரசின் கொள்கைக்கேற்ப பணம் தேவைப்படும் விவசாயிகள், கிராமியத் தொழில் வினைஞர்களுக்கு நகையீட்டின் பேரில் 4,161 உறுப்பினர்களுக்கு ரூ. 78.96 இலட்சங்கள் மைய வங்கிக் கிளைகள் மூலமாகவும், 10,140 உறுப்பினர்களுக்கு ரூ. 183.38 இலட்சங்கள் விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக 4,690 உறுப்பினர்களுக்கு ரூ. 578.66 இலட்சங்கள் கடனாக வழங்கப்பட்டுள்ளன.

120 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 12,876 தறிகளுக்காகக் கடன் ரூ. 432.65 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டு ரூ. 393.86 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமத்திற்கு ஒரு கடைத் திட்டத்தின் கீழ் இம்மாவட்டத்தில் 1,827 கிராமக் கடைகள் இயங்குகின்றன.

1985-86ஆம் ஆண்டு பயிர் ஈட்டுறுதித் திட்டத்தைச் செயல்படுத்த, தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வட்டாரங்களில் மொத்தம் 8,503 உறுப்பினர்களை சேர்த்து ரூ. 257.84 இலட்சங்கள் ஈட்டுறுதி செய்யப்பட்டுள்ளன.

இவ்வங்கி 1984-85ஆம் ஆண்டில் ஏற்பட்ட மொத்த கேட்புத் தொகை ரூ. 1,785.16 இலட்சங்களில் ரூ. 1288.66 இலட்சங்கள் வசூல் செய்து, கேட்பின் நிலுவை 27.8 சதவீதத்திற்குக் கொண்டுவந்து தேசிய கிராமிய வங்கிகளிடமிருந்து கடன் பெற்று வழங்கும் தகுதி பெற்று தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றது.

கற்பகம் கூட்டுறவுச் சிறப்பங்காடி, தனது விற்பனையில் தமிழகத்திலேயே முதலிடம் பெறுவதோடு அல்லாமல் இந்திய அளவில் மூன்றாவது சிறப்பிடத்தைப் பெறுகின்றது. இந்த அளவிற்கு விற்பனையில் சிறந்த இடத்தைப் பெற்று பீடுநடை போடுகின்றது.

27.1.1943ல் ஆரம்பிக்கப்பட்ட வட ஆர்க்காடு மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைபண்டக சாலை, தற்சமயம் மொத்தம் 50,547 அங்கத்தினர்களைக் கொண்டுள்ளது. அங்கத்தினர்களின் பங்குத்தொகை ரூ. 29.51 இலட்சமாகும். மாவட்ட அளவில் பெரியதும் சிறியதுமான 144 விற்பனை நிலையங்களும், ஒரு பெட்ரோல் பங்கும் அரிசி மற்றும் மாவு ஆலை ஒன்றும், உணவுப் பொருள்கள் தர ஆய்வு நிலையம் ஒன்றும், காய்கறி விற்பனை நிலையங்கள் நான்கும், விநியோக மையங்கள் பதின்மூன்றும் வெற்றிகரமாக நடந்து வருகின்றன.

இந்தப் பண்டக சாலையின் நடைமுறை மூலதனம் ரூ.391.29 இலட்சம். இதற்கென இருக்கக் கூடிய மொத்தக் கிடங்கு 13.

1983-84ல் ரூ.2,962.49 இலட்சமும், 1984-85ல் ரூ.3,589.66 இலட்சமும், 1985-86ல் செப்டம்பர் வரை ரூ. 1,113.49 இலட்சமும் விற்பனை செய்து சாதனை புரிந்துள்ளது.

இதன் மாத சராசரி விற்பனை ரூ. 371.16 இலட்சம். ஒரு நாளைய சராசரி விற்பனை ரூ. 14.85 இலட்சம்.

1985-86ல் ரூ. 3,979.92 இலட்சம் மதிப்பு நுகர்வோர் பண்டங்கள் விற்பனை செய்யக் குறியீடு நிர்ணயித்துச் செயல்பட்டு வருகின்றது.

பண்டக சாலையின் 43 ஆண்டுக் கால வரலாற்றில் பொன் எழுத்துக்களில் பொறிக்க வேண்டிய அளவில் 1985 ஜூலைத் திங்களில் ரூ. 412.64 இலட்சம் விற்பனை செய்து சாதனை படைத்துள்ளது.

**கற்பகம் கூட்டுறவு அங்காடியின் சிறப்பு அம்சங்களில் சில:**

* மருந்துகள் விற்பனையின் பேரில் விற்பனை வரி, வசூல் செய்யப்படுவதில்லை.

* காலணிகள் விற்பனையிலும் விற்பனை வரி வசூல் இல்லை.

* அரசு ஊழியர்களுக்கெனத் தனி நியாய விலைக்கடை நடத்தப்படுகிறது.

* கைத்தறித் துணிகளுக்குப் பண்டிகைக் காலங்களில் சிறப்புத் தள்ளுபடி உண்டு.

* பொதுமக்களிடமிருந்து வைப்பு நிதி பெறப்பட்டு 12.5% வட்டி வழங்கப்படுகிறது.

வேலூரில் சுய வேலைப்பிரிவு ஒன்று விரைவில் தொடங்கும் பணியையும், கற்பகம் சிறப்பங்காடிக்கு ரூ. 14 இலட்சத்தில் கட்டடம் கட்டும் பணியையும் எதிர்காலத் திட்டங்களாகக் குறிக்கோளை நிர்ணயித்துக் கொண்டு வெற்றிப்பாதையில் பீடு நடை போடுகின்றது.

---

**எம். அண்ணாமலை**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**வட ஆர்க்காடு மாவட்டம்**




# மனிதன் மனிதனுக்கு உதவ வேண்டும்

ஏழை எளியவர்கள் ஏற்றம் பெறவும், ஊனமுற்றவர்கள் சமுதாயத்தில் சம அந்தஸ்து பெறவும், நாளையத் தலைமுறைகளான இன்றைய இளைஞர்கள் வாழ்க்கையில் முன்னேறவும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்டார்கள். அந்தக் கனவு நனவாகின்ற வகையிலே அறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான பிப்ரவரித் திங்கள் 3 ஆம் நாள், பகவான் மகாவீரர் அகிம்சை பிராச்சார சங்கத்தின் சார்பில் ஊனமுற்றவர்களுக்குக் கருவிகளும், மாணவ மணிகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**இளைஞர்கள் மத்தியில்....**

தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் (சட்டம், ஒழுங்கு) திரு எஸ். ஸ்ரீபால் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அகிம்சையின் தத்துவம் போதிக்கப்பட்டது. வறுமை அகலவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் அகிம்சை நெறியின் கருத்துக்கள் இளைஞர்கள் மத்தியிலே பரவ வேண்டும். சமுதாயத்தில் நலிந்தவர்களுக்கு உதவுவது அரசின் கடமை என்று விட்டு விடாமல், வசதி படைத்தவர்கள் தாராள உள்ளத்துடன் உதவ முன் வரவேண்டும்'' என்றார்.

**உதவிக் கருவிகள்**

இந்த விழாவில், தமிழக அரசு மக்கள் நல்வாழ்வுத்துறையின் சென்னை கே. கே. நகர் உடல் ஊனமுற்றோர் சிகிச்சை நிலையம் பரிந்துரை செய்த 25 பேருக்கும், தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனம் பரிந்துரை செய்த 8 பேருக்கும் செயற்கை உறுப்புகள் வழங்கப்பட்டன. மூன்று சக்கரச் சைக்கிள்கள், காது கேட்கும் கருவிகள், ஊன்று கோல்கள் முதலியன வழங்கிய போது நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் 'கொல்லாமை' பற்றி நடந்த பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற 12 மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

**மகாவீரரின் தத்துவங்கள்:**

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பரிசுகளை வழங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார்:

''மகாவீரரின் தத்துவங்கள்- உணர்வுகள் எல்லாம் இன்றைய சமுதாயத்துக்கு உணர்த்தப்பட வேண்டும் - நடைமுறைப்படுத்தி வரவேண்டும்.

''இங்கே மாணவர்கள் பரிசுகள் பெற்றார்கள். பரிசு பெற்றதோடு அவர்கள் நின்று விடக்கூடாது. கொல்லாமை பற்றி எடுத்துச் சொன்னதற்காக இந்தப் பதக்கம் கிடைத்தது, பரிசு கிடைத்தது என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். மாணவர்கள்- இளைஞர்கள் எதிர்காலத்தை உருவாக்குபவர்கள்- இந்தக் கருத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

''கை இல்லாமல், கால் இல்லாமல், கண்பார்வை இல்லாமல் உள்ள ஊனமுற்றவர்களை உதறிவிடக் கூடாது - கை, கால் இருக்கிற, கண்பார்வை இருக்கிற மனிதர்களைக் காட்டிலும் அவர்கள் திறமையாக கொடுத்த வேலையைச் செய்வதை நாம் பார்க்கிறோம்.

**மனிதன் திருந்த வேண்டும்**

''ஊனமுற்றவர்கள் தங்களைக் குறைத்துக் கொள்ளக் கூடாது; மற்றவர்களும் அவர்களைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். மனிதன் மனிதனாகத் திருந்த வேண்டும். மனிதன் மனிதனுக்கு- சமுதாயத்துக்கு உதவ வேண்டும். நல்லவர்களை நினைக்க வேண்டும் - போற்ற வேண்டும். அப்போதுதான் நல்லவர்கள் உருவாவார்கள், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அப்படிப்பட்ட நல்லவர்களுக்கெல்லாம் நினைவுச் சின்னம் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்''.

இந்த இனிய விழாவில் திரு எஸ். மோகன்மல்ஜி சோர்டியா, கலைமாமணி திரு கருப்பையா ஆகியோர் கலந்து கொண்டார்கள். திரு கே. சி. சேட்டியா நன்றி கூறினார்.

—பி. வி. கிரி



# இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு

இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தினால் கடந்த 5.2.85 முதல் 15.12.85 வரை சுமார் 26,300 இலங்கை வாழ் தமிழர்கள் இராமேஸ்வரம்-தனுஷ்கோடி வழியாக ''ஆதரவற்ற'' அகதிகளாகப் பதிவு செய்யப்பட்டு மண்டபம் முகாம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் தற்காலிகமாகக் குடி அமர்த்தப்பட்டு உள்ளனர். இவர்களில் தற்போது 961 குடும்பங்களைக் கொண்ட 3,565 இலங்கை அகதிகள் மண்டபம் முகாமில் தங்கியுள்ளனர். சுமார் 1000 குழந்தைகளும், ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் 150ம் மண்டபம் முகாமில் உள்ளனர்.

இராமேஸ்வரம் - தனுஷ்கோடியில் படகுகள் மூலம் வந்துசேரும் இலங்கை அகதி குடும்பங்கள், இராமேஸ்வரம் துறைமுகத்தில் அமைக்கப்பட்டுள்ள வரவேற்பு மையத்தில் சுங்கத்துறை மற்றும் அயல் நாட்டவர் பதிவுத் துறையில் விசாரிக்கப்பட்ட பின், மறுவாழ்வுத் துறையினரால் பதிவு செய்யப்படுகின்றனர். இவர்கள் வந்தவுடன் தேனீர், மதிய உணவு ஆகியவை வரவேற்பு மையத்திலேயே வழங்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வரவேற்பு மையத்தில் அடிப்படை மருத்துவ வசதி, காலரா தடுப்பு ஊசி, மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனை ஆகியவைகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அகதிகள் பதிவு செய்து தக்க மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பின், மாலை நேரத்தில் இராமேஸ்வரத்தில், பிரத்தியேகமான முறையில் ஒழுங்கு செய்யப்பட்டு சத்திரங்களில் ஓரிரு நாட்கள் தங்க வைக்கப்படுகின்றனர். மண்டபம் முகாம் தனித்துணை ஆட்சியர் (மறுவாழ்வு) ஒப்புதலின் மேல் இவர்கள் புகை வண்டி மூலம் இராமேஸ்வரத்திலிருந்து மண்டபம் முகாம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இராமேஸ்வரத்தில் தங்கும் காலத்தில் உணவு இலவசமாக வினியோகிக்கப்படுகிறது. இதற்கென வயது வந்த ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ரூபாய் 9ம் சிறுவர்களுக்கு ரூபாய் 5.50ம் என்ற அடிப்படையில் உணவு வழங்கத் தக்க அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

மண்டபம் முகாமில் இலங்கை அகதிகள் வந்தவுடன் அவர்களது புகைப்படம் எடுக்கப்பட்டு, அனுமதிப் பதிவேட்டில் குடும்ப விவரங்கள் பதியப்பட்டு, நிவாரண உதவிகளாக உடை, பாய் மற்றும் சமையல் பாத்திரம் வழங்கப்படுகின்றன. சுமார் ரூ. 400 பெறுமான உடைகளும், ரூ. 550 பெறுமான பாத்திரங்களும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மண்டபம் முகாம் வந்து சேர்ந்தவுடன் ஒருவேளை உணவும் அரசு சார்பில் வழங்கப்படுகிறது. பாத்திரம் உடைகள், மற்றும் அரிசி வாங்குவதற்கான குடும்ப அட்டை ஆகியவை வழங்கப்பட்டு அன்று மாலையே அகதி குடும்பங்களுக்கு இருப்பிடங்கள் ஒதுக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றன.

இரண்டு பெரியவர்கள் மற்றும் இரண்டு சிறியவர்கள் கொண்ட ஒவ்வொரு சராசரிக்குடும்பத்திற்கும் மாதம் ரூ. 275 வீதம் பணக் கொடை வழங்கப்படுகிறது. இது 15 நாட்களுக்கொரு முறை

**கோ. தி. மோகன்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுர மாவட்டம்.

பட்டுவாடா செய்யப்படுகிறது. இவர்களுக்கு அரிசி ஒரு கிலோ 57 காசு என்ற குறைக்கப்பட்ட விலையில் வழங்கப்படுகிறது. மற்றும் ஒரு குடும்பத்திற்கு மற்ற தமிழகத்தில் உள்ள குடும்பங்கள் போல் சர்க்கரை, சமையல் எண்ணெய் ஆகியவை நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படுகின்றன. ஒரு குடும்பத்திற்கு 5 லிட்டர் மண்ணெண்ணெய்குடும்ப அட்டை அடிப்படையில் நியாய விலைக் கடை மூலம் வழங்கப்படுகிறது. மற்றும் ஒரு கிலோ விறகு 40 காசு என்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. மண்டபம் முகாமில் உள்ள நியாயவிலைக் கடை இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நடத்தப்படுகிறது.

இம்முகாமில் தற்போதுள்ள கட்டடங்களின் அடிப்படையில் சுமார் 5000 அகதிகளைத் தங்க வைக்க இயலும்.

**முகாமில் உள்ள அடிப்படை வசதிகள்**

தற்போது 91 கட்டடங்கள் அகதிகளுக்கென இம்முகாமில் ஒதுக்கப்பட்டு உள்ளன. இவையன்றி 200 தற்காலிகக் கட்டடங்கள் கட்டப்பட்டு மறுவாழ்வுத் துறையிடம் ஜூலை மாதம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இம்முகாமுக்கு இரண்டு தனி வேறு அமைப்புகள் மூலம் 2.2 லட்சம் காலன் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதற்கென 2 தேக்கத் தொட்டிகளும் 68 கிணறுகளும் உள்ளன. இவையன்றி53பாதுகாக்கப்பட்ட கிணறுகள் தூர் எடுக்கப்பட்டு அகதிகள் உபயோகத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள அகதிகள் மக்கட் தொகைக்கு மட்டுமே இந்தத் தண்ணீர் வசதி போதுமானது.

50 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை ஒன்று மண்டப முகாமில் இயங்கி வருகிறது. அது மட்டுமின்றி மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் ஒரு தானியங்கி மருந்தகமும் இம்முகாமில் செயல்படுகிறது. இதன் மூலம் இம்முகாமின் சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் மருத்துவ வசதிகள் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது அரசு சார்பிலும் தன் அமைப்பு இயக்கங்கள் சார்பிலும் மருத்துவ முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

அகதிகள் குழந்தைகளுக்குக் கல்வி வசதிக்கென ஒரு தனி ஆரம்பப் பள்ளி ஊராட்சி ஒன்றியம் சார்பில் துவக்கப்பட்டுள்ளது. இதில் 830 குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். தற்போதுள்ள மண்டபம் முகாம் உயர்நிலைப் பள்ளியில் 6வது வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை 214 அகதிக்குழந்தைகள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் இலவசமாகப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் ஆகியவை தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் கல்வி கற்கும் அகதிக்குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவு வழங்கப்படுகிறது. இது மட்டுமின்றி 5 வயதுக்குக் குறைவான 70 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவு மையத்தின் மூலமாக மதிய உணவு கொடுக்கப்படுகிறது. இந்தியக் குழந்தைகள் நல சங்கம் மற்றும் விஸ்வ இந்து பரிஷத் ஆகியவை தலா 50 குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கி வருகின்றன.



மண்டபத்தில் மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் திரு த். இராமசாமி அவர்கள் இலங்கைத் தமிழர் வரவேற்பு மையம் ஒன்றில் இலங்கைத் தமிழ்க் குடும்பங்களுக்கு வேட்டி, சேலை வழங்குதல்.

**கட்டுமானப் பணிகள்**

ரூபாய் 92.5 இலட்சம் செலவில் முதல் கட்டமாக, 500 புது வீடுகள் கட்ட தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அதில் தற்போது 180 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இவ்வீடுகளுக்கு மின் வசதியும் தண்ணீர் வசதியும் விரைவில் கொடுக்கப்பட இருக்கின்றன.

இரண்டாவது கட்டப் பணியாக ரூபாய் 1.12 கோடி செலவில் 700 வீடுகள் கட்டும் பணி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு இதற்கான பூர்வாங்க வேலைகளைத் தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகம் விரைவாக மேற்கொண்டுள்ளது.

இவை மட்டுமின்றி, ஏற்கெனவே 18 கட்டடங்கள் ரூபாய் 8 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையினால் பழுது பார்க்கப்பட்டுள்ளன. இரண்டாவது கட்டமாக, தற்போது 16 கட்டடங்கள் ரூபாய் 5 இலட்சம் செலவில் பழுதுபார்க்கப்பட்டு பணிமுடியும் தறுவாயில் உள்ளது.

இவை மட்டுமின்றி ரூபாய் 5.3லட்சத்தில் முகாமைச் சுற்றி வேலி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மண்டபம் முகாமை அழகுபடுத்துவதற்காக 5000 செடிகள் கடந்த நவம்பர் மாதம், இராமநாதபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக நடப்பட்டன. இவையன்றி சுமார் 250 அழகு பூச்செடிகளும் நடப்பட்டுள்ளன.

**பொழுதுபோக்கு மற்றும் தொழிற்பயிற்சி**

''மைத்ரி'' என்னும் கிறித்துவ சமூகப்பணி இயக்கமும், இராமகிருஷ்ணா மிஷன் ஆசிரமமும், வாலிபால் விளையாட்டு மைதானம் நிறுவியுள்ளன. அவ்வப்போது மாலை நேரத்தில் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. சி.டி.வி.டி. (சி.எஸ்.ஐ) என்ற நிறுவனம் அகதிகளுக்கென தையற்கலை, தட்டச்சு செய்தல், மரவேலைப்பாடு, மின்சார ஒயரிங் ஆகிய துறைகளில் தொழிற்பயிற்சி அளித்து வருகிறது. 12 அகதி ஆசிரியர்கள் பள்ளிகளில் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



# அரவணைக்கும் அன்புக்கரங்கள்

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற வனவிலங்குச் சரணாலயமாக விளங்கும் முதுமலைப்பகுதியைச் சுற்றியுள்ள மசினகுடி, முதுமலை, சோலூர், எப்பநாடு மற்றும் கடநாடு வருவாய் கிராமங்களைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் முன்னேற்றத்திற்காகத் தொடங்கப்பட்டு, கடந்த 1982ஆம் ஆண்டு முதல் மசினகுடி மலைவாழ் மக்கள் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் கூட்டுறவு இயக்கம் ஆற்றி வரும் பணிகள் பலப்பல.

குரும்பர், இருளர் மற்றும் கசவர் என்ற பழங்குடியினர் 300 குடும்பங்களும், பழங்குடியினரல்லாத 151 குடும்பங்களும் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இச்சங்கத்தின் மூலம் இப்பகுதியிலுள்ள 1200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

முதுமலையைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதியிலிருந்து மரப்பாசை, பூச்சக்காய், தேன், நெல்லிக்காய், புளி, கடுக்காய் போன்ற சிறு வனப் பொருட்களை மலைவாழ் பழங்குடியினர் சேகரித்துத் தாங்கள் உறுப்பினர்களாக உள்ள இச்சங்கத்திற்கு அளித்து நியாயமான விலையைப் பெறுகின்றனர்.

சிறு வனப் பொருட்களுள் மரப்பாசை என்பது மகாராஷ்டிர மாநிலத்திற்குப் பெருமளவில் அனுப்பப்படுகிறது. மசாலாவில் இப்பொருள் பயன்படுத்தப்படுகிறது. அதேபோல பூச்சக்காய் என்பது ஆந்திர மாநிலத்தில் சீயக்காய் போலவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் நகைகளைச் சுத்தப்படுத்த இவ்வனப் பொருள் பயன்படுகிறது. மழைக்காலத்தில் தான் மரப்பாசை அதிகம் சேகரிக்க முடியும். பழங்குடியினர் மட்டுமே இச்சிறு வனப்பொருட்களைச் சேகரித்துக் கொண்டுவர அனுமதிக்கப்படுகின்றனர். நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை சேகரம் செய்வதற்குச் சரியான காலமாகும். இதர காலங்களில் குரும்பர் மட்டும் மரப்பாசை சேகரிக்கின்றனர்.

1984-85ஆம் ஆண்டில் ரூ. 1,57,500 ரூபாய் மதிப்புள்ள சிறு வனப்பொருட்கள் இச்சங்கத்தின் மூலம் விற்பனைசெய்யப்பட்டுள்ளன. கொடிய வனவிலங்குகளின் அபாயத்தை எதிர்நோக்கி தங்களின் தொழிலைச் செய்துவரும் சங்க உறுப்பினர்களுக்கு விபத்துக் காப்பீட்டு நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள பொது மக்கள் நலனுக்காக நியாயவிலைக் கடை ஒன்றையும் இச்சங்கம் நடத்துகிறது. இச்சங்கம் 1984-85ல் 9 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளது.

இச்சங்கம் 406 உறுப்பினர்களுக்கு, பங்கு மானியம் அளித்துள்ளதோடு, மழையில் நனையாமல் பணிபுரிய பாதுகாப்பு மழைக்கோட்டும், அரிவாளும், 14 பழங்குடி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் 20 குரும்பர் உறுப்பினர்களுக்கு இரண்டு இணைச் சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன.


1984-85ல் 62 உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் வாங்க 1,90,000 ரூபாய் மத்தியக்காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த ஜூலைத் திங்கள் முதல் அக்டோபர் வரையிலான 4 மாதங்களில் 27 உறுப்பினர்களுக்குக் கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வாங்கவும், இரும்புப் பட்டறை வைப்பதற்கும் 81000 ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள இவ்வகைச் சங்கங்களில் முதன்முதலாக இச்சங்கத்தில்தான் நகைக்கடன் வழங்கப்பட்டு வருகிறது. 18.8.85 முதல் 31.10.85 முடிய இரண்டு இலட்ச ரூபாய் நகைக் கடனாக வழங்கியுள்ளது.

இச்சங்கமானது 1984-85ஆம் ஆண்டிற்கு உறுப்பினர்கள் வேலை செய்து சம்பாதித்த கூலியின் அடிப்படையில் ஒரு ரூபாய்க்கு 10 காசு வீதம் மொத்தம் ரூ. 6164 போனஸாக வழங்கியுள்ளது.

இச்சங்கத்தின் உறுப்பினரான மசினகுடியைச் சேர்ந்த தேன் குரும்பர் இனத்தைச் சேர்ந்த திரு கோபன் (32 வயது), ''இந்த சொசைடி ஆரம்பிக்கிறதுக்கு முன்பு நாங்களெல்லாம் உயிரைப் பணயம் வச்சு தேன், மரப்பாசம் எல்லாம் காட்டிலிருந்து சேகரம் செஞ்சி தனியார்கிட்டே நியாயமான விலைக்கு விக்கிறதுக்கு ரொம்பவும் கஷ்டப்பட்டிருக்கோம். அப்படியே வித்தாலும் ஒருநாளைக்கு 8 ரூபாய் வரைக்கும்தான் கெடச்சது. ஆனா, இப்போ சொசைடியில் நெம்பரானபிறகு தெனம் 22 ரூபாய் கூடுதலாஎங்களுக்குக்கிடைக்குது'' என்று சொன்னபோது கூட்டுறவின் மூலம் அவர்கள் பெற்ற புது வாழ்வின் மகிமை புரிகிறது.

**இரெ. அண்ணாதுரை,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**நீலகிரி மாவட்டம்.**




## சென்ற இதழில்...

சட்டப்பேரவை - மேலவை கூட்டுக் கூட்டத்தில் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் உரை நிகழ்த்தும் காட்சி சென்ற இதழ் (1-2-1986) அட்டையை அலங்கரித்தது.

# பயிற்சி பெறுவோர்க்கு பயனுள்ள கருத்துரைகள்

**ஏ. பத்மநாபன், இ.ஆ.ப.,**
**குற்றத்தடுப்பு ஆணையர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த ஆணையர்.**

பணியில் உள்ளபோதே பயிற்சிப் படிப்பில் ஈடுபடும் இத்தகைய திட்டத்தை வகுப்பதற்கு மேற்கொண்ட சீரிய முயற்சிகள் குறிப்பிடத்தக்கனவாகும். பதினேழாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் குடியேற முனைந்த காலையில் தலைமைச் செயலகப் பணித் துவக்கம் தொடங்கியதெனலாம். பின்னர் 1800-ஆம் ஆண்டில், ஆட்சிப் பொறுப்புகள் அதிகரித்தமையால் தலைமைச் செயலாளர் பதவி ஒன்றையும், செயலாளர்கள் பதவிகள் மூன்றையும் உருவாக்கி கிளைவ் பிரபு இம்முறைக்கு வலிவு ஏற்படுத்தினார். கடந்த இரண்டு நூற்றாண்டுக் காலப் பகுதியில் தலைமைச் செயலகப் பணி விரிவடைந்து வலுப்பெற்று இன்றைய நிலையை எய்தியுள்ளது. தமிழ்நாட்டின் நிர்வாகம், நாட்டின் பிறபகுதியினரின் பாராட்டுதலைத்தொடர்ந்து பெற்று வருவது சிறப்பினுக்குரியதாகும். என்னுடைய 35 ஆண்டுக்காலப் பணியின் பல்வேறு நிர்வாகிகளில் ஒருமித்த போற்றுதலைத்தமிழகம் பெற்றுவருவதை உணர்கிறேன். இதற்குக் காரணம் தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் அலுவலர்களின் சீரிய முயற்சியும் கடமைப் பற்றும் ஆகும். இத்தகு சிறப்புமிக்க போற்றுதலை, உங்கள் தொடர்ந்த அயராத உழைப்பாலும் கடும் முயற்சியாலும் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய நிர்வாகம், ஆங்கிலேயர் காலத்தில் இருந்ததற்கு முற்றும் மாறுபட்டதாகும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துவதும் அவர்களின் நலனைப் பேணுவதும் குறிக்கோளாக இருந்தது; ஆனால், இன்று, உயர்ந்த சமூக-பொருளாதார வளர்ச்சியை, சமத்துவ சமுதாயம் உருவாக்கிடும் உன்னத நோக்கத்தை அடைந்திடத் திட்டமிட்டு ஆட்சி செய்து வருகிறோம். மாவட்ட அளவில் எத்தகைய திட்டங்களையும் செயல் முறைகளையும் நாம் வகுத்து மக்களின் நலவாழ்விற்கும் பொருளாதார மேம்பாட்டுக்கும் நாம் முனைந்து பணியாற்றி வருகிறோம் என்பதைத் தலைமைச் செயலகத்திலுள்ள நீங்கள் நன்கு அறிவீர்கள்.

பழைய நிலையிலேயே ஒரு தொழில் நடைபெற்றால், அவ்வப்போது நிகழும் நவீன முன்னேற்றங்களைக் கவனியாது செயல்பட்டால் தொழில் ஆதாயமின்றிப் போய்விடும்; உற்பத்தி சீரழியும். எனவே, தொழிலை நவீனப் படுத்தவேண்டும். அதுபோன்றே நமது அறிவையும் செயல்முறைகளையும் நவீனப்படுத்திக் கொள்வதும் அவசியம். புதிய சிந்தனையும் செயல்முறையும் நிர்வாகம் சீராக நடைபெறவும் வலிவாக அமைந்திடவும் தேவை. பணி இலக்குகளை நிர்ணயித்து அந்த இலக்கினை அடைந்திட விரைந்து செயல்படவேண்டுமென்று நமது மாண்புமிகு முதலமைச்சர் விரும்பியவாறு நீங்கள் பணியில் முன்னேற்றமெய்திடுவது உங்கள் கடமையும் பொறுப்புமாகும். இதற்காக உங்களுக்குச் சில வழிமுறைகளைக் கூறிட விரும்புகிறேன்.

நீங்கள் கோப்புகளைப் பரிசிலிக்கும்போது அதில் என்ன அடங்கியிருக்கிறது என்பதைக் குறிப்பிடாதீர்கள்; அதில் என்ன வேண்டப்படுகிறது என்பதையும் எந்த அம்சத்திற்கு ஆணை தேவைப்படுகிறது, இதுபோன்ற சிக்கலில் முன்பு ஆணையிடப்பட்டுள்ள முன்மாதிரி என்ன, உங்கள் கணிப்பு என்ன என்பதைச் சுருக்கமாக எழுதுங்கள். மனுக்களில் பெரும்பாலும் தங்கள் குறைகளை எழுதியிருப்பார்கள். ஓரே பொருளைப் பற்றி அதே நபர் மீண்டும் மனுக்கள் அனுப்புவதைத் தவிர்க்க வழிகாண வேண்டும்.

**தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர்கள், உதவிப் பிரிவு அலுவலர்கள் ஆகியோருக்கு நிகழ்ந்த பணிக்காலப் பயிற்சிப் படிப்புத் துவக்க நாளில் ஆற்றிய உரையின் சுருக்கம்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


Exotic Designs for
the New Year
A new range added in
Chiffon, Polyester, Silk
and Cotton sarees for you.
Visit Co-optex showroom.
Co-optex
Handlooms
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

